Regd: No. 5277. UDUMALAI BEERANGI டெலிபோன் 2597.

எல்லவரும் இன்புற்றிருக்க வேண்டும்

# உடுமலை பீரங்கி

ஆசிரியர் உடுமலை B. இரங்கநாதன்

8 பக்கங்கள் | வாரப்பதிப்பு | விலை ஒரு அணு

வெடி 1. | சென்னை, சனிக்கிழமை (27-11-1948) | குண்டு 8

# தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்

## காமராஜரின் பஞ்சு - பாணம்

வால்நட்சத்திரம் தென்பட்டதால், பஞ்சாங்கத்தையும், சாஸ்த்திரத்தையும் மெய்ப்படுத்துவதற்காக, எந்த நாட்டிற்கோ, நகரத்திற்கோ ஊருக்கோ, வீதிக்கோ, சந்துபொந்துக்கோ, கேடு விளைந்ததாக இதுவரை எந்தத் தகவலுமில்லை. எந்த ராசாவோ. மந்திரியோ செத்துவைத்தாகவும் செய்திகாணோம்.

ஆனால் ஒன்றுமாத்திரம் உண்மையாகலாம்போன்றிருக்கின்றது, அதாவது தமிழ்நாட்டுக் காங்கிரசுக்கும், சென்னை மந்திரிசபைக்கும் ஏதோ கிரகதோஷம் ஏற்பட்டிருப்பதுபோல் அறிகுறிகள் தென்படுகின்றன. இல்லாவிட்டால் தமிழ்நாட்டு "ராஷ்டிரபதியான" ஸ்ரீஜத் காமராஜாஜி, அவர்கள் இம்மாதிரி; (வால்நட்சத்திரம் திடீரென தோன்றி, உலகை அதாவது வைதீக உலகத்தாரை ஒரு குலுக்குக் குலுக்கி, ஒரு உலுக்கு உலுக்கி தத்தளிக்கச் செய்துவிட்டதுபோல்) திடுதிப்பென்று ராமனாதபுரம் ஜில்லா காங்கிரஸ் (அரசியல்) மகாநாட்டில் இப்படிப் பேசிவைத்து பொதுஜனங்களை, (காங்கிரஸ்காரர்களை) அதைவிட பன்மடங்கு வன்மையாக மந்திரிகளைக் கலங்கும்படி செய்திருப்பாரா? சென்னையில் பெய்த மழை ராமனாதபுரத்தில் இல்லாமலிருக்காதென்று கருதுகிறோம். எனவே, இங்கேயுள்ள குளிர்ச்சி அங்கேயுமிருக்கலாம். கொதிப்[illegible]யைத் தூண்டும் பொருள் அங்கே இருக்காதென்றே நம்புகிறோம். அப்படியிருந்தும், தலைவரவர்கள் பேசியிருப்பதைகாணுமிடத்து கலக்கம்தான் (காங்கிரஸ்காரர்களுக்குத்தான் இது. எதிரிகள் குதூகலித்து குதியாட்டம் போடலாம்.) அடையச் செய்கிறது.

தலைவர் காமராஜ நாடாரவர்கள் பார்த்து "வைத்தால் குடுமி, சிரைத்தால் மொட்டை" என்ற முறையில் தான் சென்னை மந்திரி சபையிருந்து வந்திருப்பதை, காங்கிரஸ்காரர்களும், —காமராஜ பக்தர்களும் — மாத்திரமன்றி எதிர்க் கட்சியாளரும் கூட சொல்லும் மெய்மொழியாகும்.

அப்படியிருக்க இந்தப் பூலாங்குறிச்சி மாநாட்டிலே, தலைமை வகித்த காங்கிரஸ் மந்திரி சபை "பிரம்மா" சொல்லுகிறாரே! "என்னை-எங்களைக் கேட்காமல் இந்த மந்திரிசபை நடந்ததால்தான் இப்படிக் காரியங்களைசரிவர செய்யவியலாது தடுமாறித் தத்தளிக்க வேண்டியதாயிற்று." என்று. இதன் மர்மாதி மர்மம் என்ன? கேட்கவில்லையா; கேட்டு நடக்கவில்லையா அந்த காங்கிரஸ் மந்திரி சபை இதுவரை? கட்சிக் கூட்டம், கமிட்டிக் கூட்டம், மந்திராலோசனை, மசோதா ஆலோசனைக் கூட்டங்கள் என்றெல்லாம், பத்திரிகைகளில் வெளிவந்ததே செய்திகள், அவ்வப்போது பத்தி பத்தியாக பக்கம் பக்கமாக! அதெல்லாம் பத்திரிகைகளின் கட்டுக்கதைகளா? அல்லது ஆசிரியர்நாற்காலி கற்பனை சிருஷ்டிகளா? ஜமீன்தார், இனும்தார் மசோதாக்கள் மீதும் நடந்ததே "ஜாக்-ஜான்" பலே பலே குஸ்தி சண்டை காங்கிரஸ் கட்சிக் கமிட்டிக் கூட்டத்தில்! மேலிடம், கீழிடம் உத்திரவுகளெல்லாம் அலசி அலசிப்பார்த்துத் தள்ளப்பட்டதே! இதெல்லாம் பொய்யா? மதுவிலக்கை, மேலிடத்துக் கட்டளையை மீறியும், முதலமைச்சர் 'அமுல் உத்திரவாத மறுப்பை' மீறியும், கட்சியார் நுழைக்கும்படிசெய்தது நாடக சினிமாக்காட்சியா? இப்படி அப்படியெல்லாம் நடந்திருக்க,-பொது ஜனங்களும் அறியும்படி வெளிப்படையாக அறிவித்துக்கொண்டுமிருக்க, இப்போது தமிழ்நாட்டின் ராஷ்டிரபதி 'தெரியாதே! என்னைக் கேட்கவில்லையே!" என்று கபீர்தாஸ்செட்டியார் ஒத்திகை நடத்துவதன் உள் மர்மம் என்ன? "நல்லதும் லாபமும் எங்களுக்கு; அழுகலும் நஷ்டமும் ஆண்டவனுக்கு." என்று குழந்தைகள் பாடுகிறார்களே, அதைப்போன்ற, சாணக்கிய தந்திரமா இது; என்றும் சந்தேகிக்கத்தான் இடமளிக்கிறது.

இத்துடன் அவர் மனமறிந்தோ, மனமறியாமலோமந்திரிசபைக்கும்; அதற்கு மேலாகக் காங்கிரசுக்கும் தலையிறக்கத்தையும், வன்மையின்மையென்ற பட்டத்தையும், சூட்டியவரும், சூட்டிக் கொண்டவருமாகிறார்.

ஆச்சார்யா கிருபாளனியின் நாடகத்தை இவரும், இப்படி திடீரென நடிக்க முற்பட்டதுகண்டு எல்லோருக்கும் திகைப்புத்தான் ஏற்பட்டிருக்கிறது. ஆச்சாரியா கிருபாளனிக்கு ஏற்பட்டுள்ள "கோஷா" இவருக்கும் வாய்க்கலாகா தென்பதுதான் எமது மனமார்ந்த விருப்பம். ஏனென்றால், இப்போதைய நிலைமையில் நம் மாகாணத்திற்குத் தேவைப்படுவது, காமராஜரையும், ஓமந்தூராரையும் போன்ற நெஞ்சுரக்காரர்கள்தான். சட்டத்தையும் விட்டத்தையும் பிடித்துக் கொண்டு, சர்க்கஸ் வித்தை செய்யும் பட்டதாரிகளாலோ, வக்கீலய்யர்களாலோ, இந்த நெருக்கடியை, வீசமும் சமாளித்திருக்க முடியாதென்பது திண்ணம். பிரஞ்ச் மந்திரிசபை போன்று இங்கும் மந்திரிசபைகளும், சினிமாக் காட்சிகள் மாறுவதுபோல் நாளுக்கொன்று கிழமைக் கொன்றாகத் தான்-மாறிக்கொண்டிருக்க வேண்டும். ரணகளத்தில் முரட்டுப்பிடிவாதம்தான் தேவையேயன்றி, சர்க்கஸ் வித்தையோ, குஸ்தி கைவரிசைகளோ

### தென் ஆபிரிக்காவில் எழும் சந்தேகம்! அறிவாளிகளுக்கு ஓர் நற் சந்தர்ப்பம்!

——: (x) :——

"உடுமலை பீரங்கி" ஆசிரியர் அவர்களுக்கு,

வந்தனம்.

நம்முன்னோர் செய்யும் கிரியைகளில் சில சந்தேகங்களை நிவர்த்திசெய்து உண்மையை அறியும் பொருட்டு இக்கடிதம் தங்களுக்கு எழுதப்படுகிறது.

நம்மவரில் ஒருவர் இறந்ததும் அவரை தகனம் செய்யும்போது, இறந்தவரின் புதல்வர் கொள்ளி வைக்கின்றார். இதன் கருத்தென்ன? 1. கொள்ளி யார் வைக்கவேண்டும்! 2. எவ்விடத்தில் வைக்கவேண்டும் 3. குடங்கள் எத்தனை. 4. அங்கக்குடம், கொள்ளிக் குடம் இவைகளின் கருத்தென்ன? 5. இக்குடங்கள் எவ்விடத்தில் உடைக்கவேண்டும். 6, குடங்கள் உடைப்பதனால் அடையும் பலனென்ன? 7. உடைக்காமல் இருந்தால் ஏதாவது தீது விளையுமோ? ஆதித் திராவிட மக்கள் இக்கிரியைகளை செய்தனரோ? அல்லது ஆரியர் வந்த பிறகே இக்கிரிகைகள் செய்யப்பட்டு வருகின்றனவோ? 8. எக்காலத்திலிருந்து இக்கிரியைகள் செய்யப்பட்டு வருகின்றன?

சமாதி செய்தால் லிங்கம் செய்து அதற்கு அபிஷேகம் செய்வதின் கருத்தென்ன? லிங்கம் எதை விளக்குகின்றது? சமாதியில் கொள்ளிவைப்பது சரியா? குடம் உடைக்கலாமா? ஆதித்திராவிடர் லிங்கத்தை வைத்து அபிஷேகம் செய்தனரோ? அல்லது இதுவும் ஆரியரின் கற்பனையோ? பால் தெளித்தலின் காரணமென்ன? நவதானியம் போடுவதின் காரணமென்ன? வாய்க்கரிசி என்றால் என்ன? இதனால் அடையும் பிரயோசனம் என்ன?

இப்படிக்கு: தங்களன்புள்ள,
ப. சிங்காரவேலு,
பெரிடோரியா, டிரான்ஸ்வால் தென் ஆபிரிக்கா.

குறிப்பு:— பகுத்தறிவு இயக்கங்களைச் சேர்ந்த நேயர்களே! உங்களுடைய விடை என்ன? மூடப் பழக்க வழக்கங்களை ஒழிக்கவேண்டும் என்று அல்லும் பகலாய் உழைத்துவரும் அறிஞர்களே, ஆதரவு அளிப்போர்களே, தலைவர்களே உங்களுடைய விடை என்ன? ஆராய்ச்சி யாளர்களே! உங்களுடைய முடிவென்ன ? ஆஸ்தீகர்களே ! அறிவுக்குப் பொருந்திய வண்ணம் தக்க ஆதாரங்களுடன் சந்தேகங்களைத் தீர்க்க முடியுமா ? [ஆ-ர்]

அல்லவென்பதை அனைவரும் ஒப்புக்கொள்ளுவர். காமராஜரோ பரம்பரைச் சந்தைப் பேரக்காரர். என்ன நஷ்டம் வந்தாலும்; சரக்குகளைக்கட்டிப்போட்டு மக்கிப்போகும்படி நேர்ந்தாலும், பேரத்தை மாத்திரம் விட்டுக் கொடுக்காத வர்த்தக நிபுணர் இனத்தவர். ஓமந்தூராரோ விவசாயி. நெஞ்சுரமும் முன்னேக்கிச் செல்லும் விடாப்பிடிவாதமும் விவசாயிகளுக்கு சிறப்புப் பண்புகள். அவர்கள் சொன்னால் சொன்னது தான், பிடித்தால் பிடித்தது தான். பிடியும் உடும்புப்பிடி, குரங்குப் பிடியாகத்தானிருக்கும். அவர்கள்மனத்தில் சரி என்று பட்டதை செய்துவிட்டுத்தான் மறுகாரியம் பார்ப்பர். இத்தகைய இரு உருக்கு இயந்திரங்களால்தான் சென்னை மாகாணத்தின் “மானமும், ஆற்றலும்” பறிபோகாமலிருக்கிறதென்பதை எதிரிகளும் ஒப்புக் கொள்வர்.

அப்படியிருக்க தோழர் காமராஜரே, “புகார் புராணத்தை” அதுவும் ஓமந்தூரார் மந்திரிசபை மீதே நேர்முகமாகப் பாட முற்பட்டுவிட்டது இம்மாகாணத்தின் பொல்லாத காலமென்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது.

திரு. காமராஜரின் முதல் பாயச்சல் பொதுப்படையாக ஓமந்தூரார் மந்திரிசபை மீதும்; முக்கியமாக “சத்திய சந்தர்” ஓமந்தூரார் மீதும் பாய்கிறது. “தன்னையோ காங்கிரசையோ கேட்டும், ஆலோசித்தும், திட்டங்களை வகுக்கவும் அமுல் நடத்தவுமில்லை” என்பது முதல் புகார். கட்சிக் கூட்டங்கள், கமிட்டிக் கூட்டங்கள், சட்டசபைக் கூட்டங்கள் என்பன அவ்வப்போது நடந்தபோது தோழர் காமராஜர் எந்த உலகில் சஞ்சாரம் செய்துகொண்டிருந்தாரோதெரியவில்லை? இவரில்லாமல்தான் கமிட்டிக் கூட்டங்கள் கட்சிக் கூட்டங்களும் நடந்தனவா? இவரை, ஒதுக்கிவைத்தா கட்சிக் கூட்டங்கள் நடத்தப்பட்டன? இருக்கமுடியாதே! இப்படி முழுப்பூசனிக்காயை இலைச் சோற்றில் ஏன் மறைக்க முற்படவேண்டுமென்பதுதான் புலனாகாத “ஆவி”ப் புதிராக விருக்கிறது.

“பிர்க்கா நிர்வாக பலன் பூஜ்யம்; இதற்கு விரயமாக்கிய பணத்தை கிராமவாசிகளின் கையில் கொடுத்திருந்தாலும் அவர்களாவது தங்களுக்கு வேண்டிய செளகரியங்களைச் செய்துகொண்டு பிழைத்திருப்பார்களே” என்று அங்கலாய்க்கிறார், அடுத்தபடி. அப்படியானால் கதர் திட்டத்திற்கும் ஹரிஜன திட்டத்திற்கும் சேதாளியாக்கி விட்டாரா இந்த பிர்க்கா அபிவிருத்தித் திட்டத்தையும்? இந்தக் “கையாலாகாத” புகார் யார்மீது? புதுமந்திரி தோழர் குருபாதம் மீதா? அல்லது அவருக்கு முன் இருந்த இரண்டாண்டு அனுபவ பாத்தியக்காரர்கள் மீதா? தோழர் குருபாதத்தின்மீது இவருக்கு ஏதாவது காய்ச்சலுண்டா என்றும் சிலர் கேட்கின்றனர். ஓமந்தூரார் தம்மிஷ்டப்படி தேர்ந்தெடுத்து நியமித்தார் குருபாதத்தை மந்திரியாக; காங்கிரஸ் தலைவரையோ சட்டசபையினரையோ முன்னதாகக் கலந்து முடிவு செய்யவில்லை யென்றும் கூறப்பட்டது. தன்னைக் கேட்கவில்லையே என்று குரோதத்தால் குறைகூறும் “படியிறக்கக்காரர்” தோழர் காமராஜரென்று நாம் ஒருக்காலும் ஒப்புக்கொள்ள மாட்டோம். தோழர் குருபாதத்தின் மீது கூறும் புகாரும் தகுதியாகாது. ஏனென்றால் அவர் அரசியலுக்கே புதியவர்! மந்திரி நிர்வாகமென்றால் கண்வைத்தியம் போன்றதா என்றும் அவர் முன் ஒருக் காலத்தில் எண்ணமிட்டுக் கொண்டிருக்கலாம். எனவே அவர்மீது கூறும் பழியும் ஓமந்தூராரின் வெள்ளி முடித்தலையின் மீதே சமத்துவதாகிறது. ஆனால் ஒன்றுமாத்திரம் திண்ணமாகக் கூறுவோம். ஓமந்தூரார் பிறரைப்புகழவும் மாட்டார், பிறர் தன்னைப்புகழ்ந்துரைக்க விரும்பமாட்டார். “கர்மவீரர்” “கர்மவீரர்” என்று உலகிடை; முக்கியமாகக் காங்கிரஸ் வட்டாரத்தில் அடிபடுகிறதே! அதற்கு அப்பழுக்கில்லாத உதாரணம் தேவையென்றால் ஓமந்தூரார் ஒருவரையே சொல்லலாம். சண்டை சச்சரவுகளை விரும்பாத முதல்தர சாத்வீகி. ‘பதவியா? நீங்கள்தானே என் தலையில் சுமத்தினீர்கள்? இந்தாப்பா, உங்களுக்கு இஷ்டமில்லையானால் எடுத்துக் கொள்ளுங்களென்று” கிராமத்தாரின் கபடமற்ற முறையில் சொல்லுபவர். சவாரிவண்டிக் காளைகளுக்குச் சவுக்கடி கொடுப்பதுபோல் தவறு யார் செய்தாலும் தயவுதாட்சண்யமன்றி கண்டிப்பவர். இத்தகையவர் மீது யாருக்கும் “காய்ப்பும்” சலிப்பும், “கிடைக்காத” ஏமாற்றமும் ஏற்படுவது இயற்கைதான். இதைக் கண்டு பொருட்படுத்தாதது “கவலை பிடிக்கும் பிடிவாத” அந்த நெஞ்சமும்.

அடுத்தபடியாக நாடாரவர்கள் போடுகிறார், மென்னுடல் கல்விமந்திரியார் மீது பெரும்பாறையைத் தூக்கி. “இந்தியைக் கட்டாயப்படுத்தி கலாட்டா விளைத்துக் கட்சியின் மதிப்பையும் கெடுத்துவிட்டாரே இந்த ராமகிருஷ்ண பரம ஹம்ச பக்தரான அவினாசி லிங்கம் செட்டியார்” என்று குற்றப் பத்திரிகை வாசித்திருக்கிறார்.

காங்கிரஸ்காரர்களும் கமிட்டிகளும் மேலிடமும் கீழிடமும் போட்ட தூண்டுகோலின்மீதுதானே கல்வி மந்திரியாரின் சாதுவுள்ளமும் ஹிந்தியைக் கட்டாயப்படுத்தவேண்டிய கட்டாயத்திற்குள்ளாகிற்று. கட்டாயம் கட்டாயம் என்றுதானே காமராஜரும் மந்திரிகளுட்பட இதுவரை பிரசாரம் செய்து வந்திருக்கின்றனர்; அந்த இந்திமீது காதல் பொங்க, அவசியம் பொங்க. அப்படியிருக்கத் திடீரென அந்தர் பல்டியடித்து “அந்தப்பாவி மனுஷன் இப்படிசெய்து விட்டானே” என்று பழுத்த மாஜி சுமங்கிலிகளின் பாட்டைப் பாராயணம் என் செய்ய வேண்டும்? இந்த மூன்று மந்திரிகளையும் “மாஜிகள்” பட்டியலில் ‘விரைவில் சேர்ந்துவிடமேண்டுமென்று பாதாள உலகக் கோர்ட்டில்” தீர்ப்பு செய்துகொண்டிருக்கிறார்களா என்றும் சந்தேகிக்க இடமளிக்கிறதல்லவா? இந்த மூன்று “சாமி” அடியார்களை விரட்டிவிட்டு மந்திரிசபையை “லோகாயதமாக்கும்” அந்தரங்க நோக்கம் ஏதாவதுண்டா? ஆனால் ஒன்றுமாத்திரம் உறுதியாகச் சொல்வோம். குமார மங்கலமோ வேறெந்த மங்கலமோ ரெட்டியார் பீடத்தில் ஏறி குந்திக்கொண்டாலும் சரி, இப்போதைய நெருக்கடியை சமாளிப்பதில், திருவற்றான் குதிரை சவாரி செய்தது போலத்தானாக வேண்டும். கனம் ரெட்டியாராவது “காட்டுப்போக்கில்” எல்லாவற்றையும் சகித்துக்கொண்டு, ‘எல்லிசெட்டி லெக்க எக்கலெக்க” என்றமுறையில் நிர்வகித்து வருகிறார். இவருக்குப் பதில்வேறெந்த சட்ட நிபுணர்கள் வந்தாலும், சட்ட ‘ஜபர்தஸ்து’ நடத்தி சட்டத்தை மூங்கில் தப்பையாக்க வேண்டிய கதிதான் ஏற்படலாமென்று அஞ்சுகிறோம். தோழர் காமராஜருக்கும் ஒன்று; அதுவும் அவருடைய சுயநன்மையைக்கருதியே எச்சரிக்கை செய்கிறோம். அவர் இப்போதுள்ள ‘ஆட்டுவிக்கும்’ தலைவர் பதவியைவிட்டு மந்திரி பீடத்தில் எட்டிக் குதித்தாரோ, அத்துடன் அவருடைய அரசியல் வாழ்வு அஸ்தமித்து விடுமென்பது உறுதி. எனவே, அவர், இம்மாதிரியான, உள் ஆசைக்கடலில் தட்டுத் தடுமாறி, வீண் பஞ்சு பாணங்களையும் பட்டாஸ் வெடிகளையும் பிரயோகித்து, டிசம்பர் வாணக்காட்சி நடத்துவது தனக்கும் தன்கட்சிக்கும் தலையிறக்கத்தையும், இறக்கு முகத்தையும் அவப்பேரையும் கூட்டுவிப்பதாகுமென்பதையும் சுட்டிக் காட்டுகிறோம். இதுவரை அடைந்த நல்ல “வீர”ப்பெயருக்குப் பழுது வரவழைத்துக் கொள்ளலாகாதென்றும் கேட்டுக்கொள்கிறோம்- இப்போதைய திடீர் போக்கு, ஜனநாயகத்துவ முறைக்கே அவப் பெயரையும் கூட்டுவிப்பதாகுமென்பதையும் தெரிவித்துக் கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது. கட்சி மந்திரிசபை ‘தனக்கு, அக்கிர தாம்பூலம் வைக்கவில்லை என்று கூறி அம்மந்திரிசபை நிர்மாண வேலைகளில் “தீண்டாமை விரதம்” கைக் கொள்வதும், “மாமியார்” நாடகம் நடத்துவதும், அரசியல் தந்திரமாகாதென்றுதான் உலகம் தீர்ப்பளிக்கும்

## புரட்சித் தீ! தீ! தீ!

(க. மாணிக்கவாசகன்)

——: (x) :——

சாதிமத மெல்லாம் தூள்! தூள்!! தூள்!!!
சாடுதடா பீரங்கி கேள்! கேள்!! கேள்!!!
நீதிநெறி களெல்லாம் நில்! நில்!! நில்!!!
நீசத்தனத் தையெலாம் கொல்! கொல்!! கொல்!!!

பார்ப்பனர் யாரது? ஏன்? ஏன்?? ஏன்???
பறையர்யார் கேட்கிறேன் நான்! நான்!! நான்!!!
ஆர்ப்பாட்ட கூச்சலெல்லாம் வீண்! வீண்!! வீண்!!!
அலறுது பீரங்கி காண்! காண்!! காண்!!!

உணவில்லை மடிகிறார் பார்! பார்!! பார்!!!
உறுத்துது காரணம் கூர்! கூர்!! கூர்!!!
பணக்காரன் இனிமேல் யார்! யார்!! யார்!!!
பாமரன் கண்ணிலேன் நீர்! நீர்!! நீர்!!!

உழைத்தவன் பிழைத்தான் ஆ! ஆ!! ஆ!!!
உறங்கினேன் அழித்தான் தூ! தூ!! தூ!!!
இழைத்தனர் கொடுமைகள் சீ! சீ!! சீ!!!
இனிமேல் புரட்சித் தீ! தீ!! தீ!!!

## உடுமலை பீரங்கியின் விற்பனையாளர்கள்

——: (x) :——

1. தாகூர் & கோ
நியூஸ் ஏஜண்ட்
பாண்டிச்சேரி
2. மானேஜர், சீர்திருத்தவாதி
வேஷண்பாக்கம்
வேலூர் (வ. ஆ.)
3. எம். கே. சுந்தரம்
நியூஸ் ஏஜண்ட்
சிதம்பரம்.
4. ஏ. அப்துல் வஹாப்
ஜெனரல் மெர்ச்செண்ட்
பஜார் தெருவு
கண்டியூர், (தஞ்சை ஜில்லா
5. கே. ஆர். சஞ்சீவிமுத்து ராஜா
வெற்றிலை பாக்குக் கடை
கடம்பர் கோவில்,
குழித்தலை.
6. சாந்தா நியூஸ் மார்ட்
10. போலீஸ் லைன் தெருவு
கரூர். *
7. யூ. பி. கிருஷ்ணசாமி
குமரன் வீதி
உடுமலைப்பேட்டை.
8. ஏ. ராமநாதர்
பன்னீர்ச் செல்வம் ஸ்டோர்ஸ்
திருநெல்வேலி (ஜங்ஷன்)
9. ஜே. சுந்தரம்
தா. பேட்டை
முசிறி தாலுகா, திருச்சி ஜில்லா
10. டி. ஏ. அனந்தன் & பிரதர்ஸ்
நியூஸ்ஏஜன்ட், மாஸ்க் தெரு
தர்மபுரி (சேலம் ஜில்லா)
11. S, ஆறுமுகம்
20. தணியர் வாணியத் தெரு
கொறநாடு, மாயவரம்
12. P. R. சீனு
பெரிய அக்ராரம்
ஈரோடு
13. பி. ராஜகோபால்
நியூஸ் ஏஜண்ட்
திருக்காட்டுப்பள்ளி.
14. T. T. P. சீனுவாசன்
திராவிடர் நியூஸ் ஏஜண்ட்
காட்டுமன்னார்கோவில்
15. சி. என். நாராயணன்
தமிழ்நாடு புக்ஸ்டால்,
ராஜன் தெருவு
கோயம்புத்தூர்
16. என். எம். என். முஹம்மது ஹனீபா
நியூஸ்ஏஜண்ட்
201/A தெற்குவெளி தெரு
மதுரை.
17. S. திராவிடமணி
42. தண்டபாணி கோவில் தெரு
திருப்பத்தூர்
18. மணி ஸ்டோர்ஸ்
சேந்தமங்கலம்
19. S. முத்துராமன்
கண்ணகி தெரு
கீழ்ப்பெரும்பாக்கம் (விழுப்புரம்)
20. சையது ரசூல்
நியூஸ் ஏஜண்ட்
பல்லடம் (P. O.)
கோயம்புத்தூர் ஜில்லா
21. Shanmugananatham
News Agent
GUDIATHAM

# வறுமையை நீக்கிய மேனாட்டார்

—: (x) :—

[ தனமனோகரன் ]

இந்நாளில் எல்லா நாட்டினரும் தங்கள் தங்கள் நாட்டில் வாழும் மக்கள் அனைவருக்கும் உயிர்வாழ்வதற்கு இன்றியமையாத உணவுப் பொருள்களையாவது அளிக்கக் கூடிய சமுதாய முறையை வகுக்க இடைவிடாது முயன்றுவருகின்றனர். இதற்கான தகுந்த திட்டத்தை வகுத்ததனாலேயே இன்று ரஷியா வறுமையிலுழலாமல் முன்னேறிக் கொண்டு வருகிறது. 'வண்மை இல்லை ஓர் வறுமை இன்மையால்' என்ற சொல் ரஷியா விஷயத்தில் உண்மையாகி விட்டது. தொன்று தொட்டுவந்த தவறான எண்ணங்களும் பண்டை மூடக் கொள்கைகளும் ஒழிந்தாலொழிய நம் நாடு முன்னேறாது. ஆனால் இப்போது நாகரீகம் பொருந்திய எல்லா அரசாங்கங்களும் தத்தம் நாட்டில்வாழும் ஒவ்வொருவருக்கும் சுகங்களை அனுபவிக்க உரிமை உண்டு என்று கருதாமல் இல்லை—உணராமலில்லை. கி. பி. 18-ம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் நூற்றுக்கு எண்பதுபேர் வறுமையிலாழ்ந்து கிடந்தனர். அக்காலத்தில் அவர்களுக்கு இருவேளை உணவுகிடைப்பதே அரிதாயிருந்தது; ஒருவேளை உணவு கிடைப்பதே நிச்சயமில்லாதிருந்தது. இந்நிலையில் அவர்கள் உடுக்கவும் வழியற்று இருந்தனர். ஆனால், இப்போதோ இங்கிலாந்தில் ஒரு அளவுக்கு வறுமை என்ற பேச்சுக்கே இடமில்லை என்ற நிலை ஏற்பட்டு விட்டது. ஆங்கில அரசாங்கத்தினர் தங்கள் நாட்டில் உள்ள ஏழைகளைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டனர்.

**மேல்நாட்டில் வறுமையை நீக்க முயற்சி :—**

மற்ற எல்லா நாட்டினரும் தங்கள் நாட்டில் உள்ள வறுமைப் பிணியை ஒழிக்க ஏராளமான விளைபொருள்களை உண்டாக்க முயன்று வருகின்றனர். நிலங்களில் எவ்வழியில் அதிகமாக விளையச்செய்யலாம் என்று நிலங்களைப்பற்றி ஆராய்ந்து வருகின்றனர். ஏராளமான விளைச்சல் உண்டாகும் பொருட்டு நிலங்களுக்கு ரசாயன முறையிலே செய்த எருக்கள் போடப்படுகின்றன. கி. பி. 16-ம் நூற்றாண்டில் ஒரு ஆண்டில் ஏக்கர் ஒன்றிற்கு ஆறு புஷெல் (ஒரு புஷல்— 60 பவுண்டு, அதாவது 20 படி) கோதுமை கிடைத்தது. இம்மாதிரி ரசாயன முறையில் நிலங்களை உழுது பண்படுத்துவதால் ஏக்கர் ஒன்றில் தற்போது முப்பது புஷெல் கோதுமை கிடைக்கிறது. இந்தியாவிலோ ரசாயன முறைப்படி விவசாயம் செய்வதைப் பற்றித் தப்பான எண்ணம் இருந்து வருகின்றது.

**விளைபொருள் அபிவிருத்தி :—**

கனடாவிலும் அமெரிக்கா ஐக்கிய நாடுகளிலும் இந்த விஞ்ஞானத் துறையில் ஏராளமான மக்கள் நிலங்களில் வேலைசெய்து வருகின்றனர். ரசாயன சாஸ்திரம், பௌதிக சாஸ்திரம், தாவர சாஸ்திரம், விலங்கு நூல் (Zoology), நுண்ணுயிர் நூல் (Bacterio-lgoy) ஆகிய இந்நூல்களில் அறிவெல்லாம் செடிகளின் இயற்கைத் தன்மையை அறிந்து கொள்வதற்கும், விளைச்சலை அதிகப்படுத்துவதற்கும் மேல்நாடுகளில் பயன்படுத்தப்படுகின்றன.

**வேலையில்லாக் கஷ்டத்தை நீக்க மேனாட்டார் முயற்சி :—**

ஒவ்வொரு நாட்டிலும் வேலையில்லாமல் திண்டாடுவோர் ஏராளமாக உள்ளனர். ஒவ்வொருநாளும் வேலையின்றி கஷ்டப்படுவோர் புற்றீசல் போல் பெருகிக் கொண்டே வருகின்றார்கள். இவ் வேலையில்லாத் திண்டாட்டம் என்னும் பகையோடு நெடுநாள் விடாப் போர் நடந்துவருகிறது. எல்லா நாட்டினரும் தங்கள் தங்கள் நாட்டுமக்களுக்கு வேலை கொடுக்கப் புதுப்புது வழிகளைத் தேடுகின்றார்கள். சில அரசாங்கங்கள் வேலையற்ற ஒவ்வொருவருக்கும் இருக்க வீடும் உண்பதற்கு வாராவாரம் ஒரு சிறிது உபகாரச் சம்பளமும் அளிக்கின்றன. வேலை தேடிக் கொடுக்கும் வரைக்கும் இந்த உபகாரச் சம்பளம் வேலையற்றிருக்கும் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்படுகின்றது. மேல் நாடுகளில் ஒவ்வொரு பெரிய பட்டணத்திலும் வேலையில்லாது திண்டாடுவோரின் எண்ணிக்கையைக் கணக்கெடுக்கவும், ஆட்கள் வேண்டப்படுகிற இடங்களைக் குறித்துவைக்கவும் தனிப்பட்ட அதிகாரிகள் உண்டு; இவர்கள் வேலை காலியாகவுள்ள இடங்களைக் குறித்து வைத்திருப்பார்கள். வேலை வேண்டுவோரும் வேலைக்கு ஆட்கள் வேண்டுவோரும் இந்த அதிகாரிகளுக்கு எழுதி உதவி பெற்றுக் கொள்ளலாம். ஐரோப்பாவில் ஒவ்வொரு நாட்டிலும் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க இப்படிப்பட்ட முறை வகுக்கப்பட்டிருக்கின்றது. இம்முறையை இந்திய சர்க்காரும் பின்பற்றி ஓரளவில் முயற்சி யெடுத்துள்ளது. வேலையில்லாத் திண்டாட்டத்தைப்போக்க இதற்கென பலமுக்கிய நகரங்களில் வேலை தேடித்தரும் அலுவலகங்கள்' (Employement Exchange Office) நிருவியிருக்கின்றனர், அரசாங்கத்தினர்.

**வறுமையை ஒழிக்க முயற்சி: —**

இத்திராவிடம் வளமான வயல்கள் பல நிறைந்த பொன்னாடு; ஆனால் இதே நாட்டில்தான் இன்று உணவுப் பஞ்சம், வறுமைப்பிணி என்றபேச்சு—உள்ளத்திற்கு வேதனைதரும் பேச்சு எழுந்திருக்கிறது. ஏன் வந்தது இந்நிலை? அறியாமையே வறுமைக்குக் காரணம். இதனை ஒவ்வொரு நாடும் உணர்ந்ததனாலேயே அதனை ஒழிக்கப் பாடுபடுகின்றனர். இதனாற்றான் பதினான்கு வயது அடையும் வரைக்கும் ஆண்களையும் பெண்களையும் பள்ளிக்கூடத்தில் கட்டாயம் கல்வி கற்குமாறு அரசாங்கம் மேல் நாடுகளிலோ வற்புறுத்துகின்றது. இக்கல்வியே அவர்களை உலக வாழ்க்கைக்கு ஏற்றவர்களாக்குகின்றது. இதனால் அவர்கள் தங்களுடைய கைகளையும் கண்களையும் நன்றாகப் பயன்படுத்திச் சம்பாதித்து, உபயோகமுள்ள குடிகளாக வாழக் கூடிய திறமையைப் பெறுகின்றார்கள். பகையின்றி பொறுப்பை யேற்றுக்கொண்டு, சமூகத்தின் அங்கத்தினராக வாழக்கூடிய வழியை இக்கல்வி அவர்களுக்குக் காட்டுகின்றது. சுகாதாரத்தைப் பற்றிய விதிகளும் குடிகள் கைக்கொள்ளவேண்டிய கடமைகளுமே இந்த இலவசக் கட்டாயக் கல்வியிற் சிறப்பாகப் போதிக்கப்படும் பாடங்கள். எதிர்காலத்தில் சிறந்த குடிகளாக விளங்கும்போது அடையவேண்டிய உரிமைகளும், குடிகளாக ஏற்றுக்கொள்ள வேண்டிய பொறுப்புக்களும் மாணவருக்குப் போதிக்கப் படுகின்றன.

அறியாமை, வறுமை ஆகிய இரு பகைகளோடும் இப்போது இடைவிடாது போர்புரிவதுபோல், இன்னும் இப்போரினை விடாமல் ஒவ்வொரு நாட்டினரும் நீடித்து நடத்துவார்களானால், ஒவ்வொருவரும் இன்பத்திலும் செல்வத்திலும் தாம் அடையவேண்டிய பங்கை அடைந்து விடக்கூடும் என்று நிச்சயமாகக் கூறலாம்.

எல்லவரும் இன்புற்றிருக்க வேண்டும்

**உடுமலை பீரங்கி**

**சந்தா விவரம்**

பிரதி சனிக்கிழமையும் வெளிவரும்.

| | | |
|---|---|---|
| தனிப் பிரதி | ரூ. | 0—1—0 |
| 6 மாதங்களுக்கு | ரூ. | 1—8—0 |
| 1 வருஷத்திற்கு | ரூ. | 2—8—0 |

6 மாதத்திற்குக் குறைந்த சந்தா இல்லை.

காரியாலயம்

33 திருவேங்கிட முதலித் தெரு பெரியமெட்டு. சென்னை, 3.

**கம்மவார் நிலை**

மாத வெளியீடு

தனிப்பிரதி விலை 0—4—0

ஆசிரியர், S. வெங்கட்டராஜன்

கிடைக்குமிடம்:—

"ஆசிரியர்"

கம்மவார் நிலை அலுவலகம்,

கரூர்.

**சீர்திருத்தவாதி**

(வார இதழ்)

5-12-48 இதழில்

புலவர். மாவண்ணா தேவராசன், முடியரசன், M. K. சுந்தரம், பு. ரா. மதிவாணன், அழகுவேலன், கா. அப்பாதுரை, ரவி. கலைமணி. எழுதுகிறார்கள். "சவுண்டிகளுக்கு சவுக்கடி" என்ற தலைப்பில் "தார்மிகஹித்து" வைப்பற்றி "வில்லி" வினா கேட்கிறார்.

தனிப்பிரதி ஒரு அணா

ஆண்டு சந்தா ரூ. 3-0-0

6 மாத சந்தா ரூ. 1-8-0

ஏஜண்டுகள் தேவை :—

நிர்வாகி,

'சீர்திருத்தவாதி'

சேண்பாக்கம்,

வேலூர் [வ. ஆ.]

**'கட்டுரையாளர்'களுக்கு அறிவிப்பு**

நீண்ட கட்டுரைகளும், தனிநபர்களைத் தாக்கும் கடிதங்களும், கட்டுரைகளும் வெளியிடவியலாதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம். கட்டுரைகள், கருத்துக் கோர்வையாக நமது பத்திரிகையில், ஒன்று அல்லது, ஒன்றரைக் காலம் இருந்தால்தான் வெளியிட வசதிப்படும். பிரசுரத்திற்கு எடுத்துக்கொள்ளப்படாதவைகள் திருப்பி அனுப்பப்படமாட்டா. (ஆ-ர்)

வெளி வந்துவிட்டது சிறந்த சரித்திர ஆராய்ச்சி நூல்

"பிவியார்" எழுதிய

**"உலகம் கண்ட திராவிடம்"**

விலை அணா 4.

அச்சில்:—

காதலர் பாதையில்...?

(உள்ளம் கவரும் காதல் நவீனம்)

முன்பணத்துடன் 25 பிரதிகளுக்குக் குறையாமல் வாங்குபவர்களுக்கு 25 சதம் கழிவுண்டு

"நிலவு" அலுவலகம்.

9. மைலை ரங்கநாத முதலித்தெரு,

தியாகராய நகர் சென்னை, 17

## அறிவிப்பு

சந்தாதாரர்கள் தயவு செய்து தத்தம் சந்தாத் தொகையை உடனடியாக அனுப்பித்து வைக்குமாறு மிகவும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

நிருவாகி.

---

எல்லவரும் இன்புற்றிருக்க வேண்டும்
உடுமலை பீரங்கி
ஆசிரியர் உடுமலை B. இரங்கநாதன்

வாரப்பதிப்பு.

| சென்னை | சனி | 27-11-48 |
|---|---|---|

# மதராஸ் கார்ப்பொரேஷன் 2

கார்ப்பொரேஷன் பொதுவரிப் பணத்திலிருந்து காந்தி ஞாபகார்த்தநிதிக்கு ரூ 10000/ கொடுக்க வேண்டுமென வரவு செலவு கமிட்டி சிபார்சு செய்ததிலிருந்தும் இப்போது சென்னை கார்ப்பொரேஷன் எல்லைக்குள் ஒரு வீட்டின் காம்பவுண்டுக்குள் உள்ள கட்டிடமில்லாத சுற்று இடம் **இரண்டு ஏகராவுக்கு** (இரண்டு மனையல்ல) மேல் அல்லது கட்டிட அளவுக்கு 20 பங்குக்கு மேலிருந்தால் **மாத்திரமே** அதற்கு வரி விதிக்க **வேண்டுமென்று** மாகாண வீட்டு வசதிக்கமிட்டி சிபார்சு செய்திருப்பதிலிருந்தும் பொது வரிப்பணம் எந்த யோக்கியதையில் செலவழிக்கப் படுகின்றதென்பதையும், கார்ப்பொரேஷனும் இவர்களும் ஏழைகளை எப்படி கசக்கிப் பிழிகிறார்கள் என்பதையும் பணக்காரர்களுக்கும் ஸ்தாபனங்களுக்கும் எவ்வளவு ஒற்றுமையும் கூட்டுறவும் இருக்கிறதென்பதையும் இனியாகிலும் சென்னை நகரவாசிகளும் சிறப்பாக வரிசெலுத்துவோர்களும் தெரிந்து கொள்ள வேண்டியது மிக முக்கிய விஷயமாகும். "இரண்டு ஏக்கரா"வுக்கு மேல் என்று சொல்வதற்குப் பதிலாக காம்பவுண்டுகளுக்குள் இருக்கும் திறப்பு சுற்றுநிலம் எவ்வளவிருந்தாலும் அதற்கு வரியே போடவேண்டியதில்லை. என்று சொல்லிவிட்டால் "உள்ளொன்று வைத்து புறம் பொன்று பேசுவது" என்னும் குற்றத்திற்காவது ஆளாகாமலிருக்கலாமல்லவா? விளைச்சல் நிலத்தின் அளவல்லவா ஏக்கராவில் குறிப்பது! கிராமங்களிலும் கூட வீடுகட்டிக் கொள்ளும் படியான நிலங்களை ஏக்கரில் குறிப்பதில்லையே. வாயால் சொல்வதும் இல்லையே. மனையென்றுதானே சொல்லப்பட்டும் பேசப்பட்டும் வருகிறது. இச் சென்னையிலும் சுற்றுப் புறங்களிலுங்கூட மனையென்றுதானே வழங்கப்பட்டு வறுகிறது. அப்படியிருக்க இந்த சிபார்சில் மாத்திரம் இத்தனை மனையென்று குறிக்காமல் "ஏகர்" கணக்கில் குறிக்கவேண்டிய அவசியம் எப்படி ஏற்பட்டது? இதை வரிகொடுக்கும் மக்களை ஏமாற்றும வித்தையெனச் சொன்னால் பிசகென்ன இருக்கிறது? என்று கேட்கின்றோம். ஏக்கர் ஒன்றுக்கு பதினெட்டு மனைகள் என்பதைத் தெரியாதவர் எத்தனையோ பேர் உண்டு இரண்டு ஏக்கர் என்று சொல்வதற்குப் பதிலாக 36 மனைகள் எனச் சொல்லியிருந்தால் எல்லாரும் எளிதில் தெரிந்து கொள்ளவும், சிபார்சின் யோக்கியதையை கண்டு கொள்வதற்கும் முடியுமல்லவா? 36 மனைகளுக்குமேல் திறப்புநிலங் கொண்ட பங்களாக்கள் எத்தனை இருக்கமுடியும்? "இரண்ட ஏக்கருக்கு மேல்" என்பதால் கார்ப்பொரேஷனுக்கு அதிக வரவு எவ்வளவு குவிந்து விடும்? **36 கிரௌண்டுக்குங் கூட வரி இல்லாமல் 36 கிரௌண்டுக்கு மேலிருந்தாலல்லவா வரி போடப்போகிறார்கள்!** இதற்கு பதிலாக காம்பவுண்டுக்குள் எவ்வளவு சுற்று இடம் இருந்தாலும் வரிவிதிக்க வேண்டியதில்லையென சிபார்சு செய்திருந்தால் கார்ப்பொரேஷனுக்கு என்ன நட்டமேற்பட்டுவிடும், எதிர்பார்க்கும் வருவாயில்லையே தவிர நஷ்டமென்று சொல்வதற்கும் இல்லையே.

ஒரு காம்பவுண்டுக்குள் சுற்று இடம் கட்டிடத்தைக்காட்டிலும் 20 மடங்குக்கு அதிகமிருந்தால் வரிபோட வேண்டுமென்பதிலிருந்து 20 மடங்குஇடம் காலியாக இருக்கவேண்டியது அவசியம் என்ற காரணத்தினலா? அல்லது அத்தகைய பங்களாக்களில் குடியிருப்பவர்களால் கார்ப்பொரேஷனுக்கு செலவொன்றும் இல்லையென்பதனலா?

ஊருக்குள் குடிக்கத் தண்ணீருக்குக் கஷ்டம். நாற்றமோ. பிண நாற்றம். இதைச் சரிப்படுத்த லக்ஷக்கணக்கில் செலவாகுமாம். இந்த லக்ஷணத்தில் எத்தனைபங்களாக்களில் தண்ணீர் வீணக்கப்படுகின்றது? என்ற தகவல் கார்ப்பொரேஷனுக்குத்தெரியாதா? ஒவ்வொரு பங்களாவிலும் தண்ணீரை அளக்கும்படியான சாதனம் அமைக்கப்பட்டிருக்கிறதா? அல்லது ஊருக்குள்ளாகவாவது, தண்ணீர் அதிகம் செலவழிக்கும்படியான இடங்களிலெல்லாம் மீட்டர் வைக்கப்பட்டிருக்கிறதா! தண்ணீர் இத்தனை கேலன்களுக்குமேல் செலவானல் மாத்திரமே மீட்டர் வைக்கப்படும் என்பதும் ஒரு குறிப்பிட்டகாலம் வரைக்கும் பரீட்சையாக வைத்து, அக்காலத்துக்குள் தண்ணீர்ச்செலவு குறிப்பிட்ட அளவுக்கு மீறுதிருந்தால் மீட்டரை எடுத்து விடுவதும் நியாயமாகுமா? அதிகச்செலவு ஏற்படுவதற்கான அவசியம் ஏற்படும் இடங்கள் எங்கேயும் மீட்டர்கள் நிரந்தரமாகப் பிணைத்து அதற்கான குடிக்கூலியையும் அதற்காகும் செலவையும் அவ்வந்த இடம், தொழில், பங்களா முதலிவைகளின் சொந்தக்காரர்களிடத்திலிருந்து வசூலிக்க வேண்டியது கார்ப்பொரேஷனின் கடமையல்லவா? பங்களா வாசிகள், பெரிய தொழிற்சாலைகளின் முதலாளிகள், பால்பண்ணைச் சொந்தக்காரர்கள், ஹோட்டல் ஐயாக்கள், இத்தகையோர்களின் விரோதம் ஏற்பட்டுவிடுமென்றா? அல்லது கார்ப்பொரேஷன் பிச்சைக்குப்போகும் போது பத்தாயிரக்கணக்கில் கொடுப்பவர்கள் அவர்கள் தான் என்ற துணிச்சலா? அல்லது அத்தகையோர்களெல்லாம் 'அனுபவிக்கப்பிறந்தவர்கள்' என்ற தீர்மானத்தாலா என்றதை மக்கள் தெரிய விரும்புவதில் தவறென்ன இருக்கிறது?

ஒரு பங்களா காம்பவுண்டுக்குள் திறப்புஇடம் வேண்டுமென்பதைப் பற்றியோ. அல்லது அனுபவிக்கிறார்களேஎன்பதைப்பற்றியோ எமக்கு எந்தவிதபொறாமையும் கிடையாது என்பதை உறுதியாகச் சொல்ல விரும்புகிறோம். சுகாதாரநோக்கத்திலேயே யிருக்கட்டும். ஒரு பங்களாவுக்குச் சேர்ந்தாற்போல் முன் பக்கத்தில் இரண்டு பங்களா இடமும் இரண்டு அள்ளைகளிலும் ஒரு பங்களா இடமும் பின்புரம் ஒரு பங்களாஇடமும் ஆக குடியிருக்கும் அதாவது கட்டிடமிருக்கும் இடத்தைக்காட்டிலும் நான்கு மடங்கு இடத்தைக்காட்டிலுமா அதிகம்வேண்டும்? இவ்விடமே அதிகமாகத் தோணவில்லையா? இதற்குத்தான் வரிவிலக்கு அளிக்கவேண்டிய அவசியம் எப்படிஉதிக்கும்? இப்படியிருக்கக் கட்டிடத்துக்கு 20 மடங்கு இடத்துக்கு அதிகமாகவிருக்கும் சுற்று இடத்திற்கே வரியென்றால் இந்த சிபார்சை எந்த அறிவாளியாவது, ஏன் அறிவாளி? அறிவுஇல்லாதவனுங்கூட ஒத்துக்கொள்ள மாட்டான் என்பதை எடுத்துக்காட்ட ஆசைப்படுகிறோம். இதை கௌன்சிலர்கள் மாத்திரம்அல்ல புதிதே வந்திருக்கும் மேயரும் கவனிக்க வேண்டுகிறோம்.

இனிச் சென்னையிலிருக்கும் குடிசைகளைப்பற்றியும் கவனிப்போம்; குடிசைகளில் அநேகமாக பரம ஏழைகளே குடியிருக்கின்றார்கள் என்பதை அறிவோம்: அவர்களுக்கு வரிவிலக்கு அளித்திருப்பதாகக் கேள்விப்படுகிறோம். இது போற்றத்தகுந்ததேயாகும். ஆயினும் குடிசைகளில் குடியிருப்பவர்கள் எல்லோரும் ஏழைகளென்றோ வருமானம் இல்லாதவர்களென்றோ எச்சிறுவரியும் கொடுக்கமுடியாதவர்கள் என்றோ சொல்வதற்கிடமில்லாவிடினும் பொதுவாக குடிசைகள், வரியிலிருந்து விலக்கப்பட்டிருப்பதாகத்தான் வைத்துக் கொள்ளவேண்டியிருக்கிறது.

பங்களாக்களிலுள்ள பணக்காரர்கள், குடிசைகளிலிருக்கும் பாமர ஏழைகளே. இவர்கள் நீங்கலாக இனி எஞ்சிநிற்பவர்யாவர்? அவர்கள்தானே நடுத்தர வகுப்பை சேர்ந்தவர்கள். ஊருக்கு இளைத்த பிள்ளையார்கோவில் ஆண்டிகள் இவர்களே அல்லவா?

இந்நடுத்தரவகுப்பைச்சேர்ந்தவர்கள்தானே. தொழிலாளிகள் உள்பட, கீழ்த்தர உத்தியோகஸ்தர் உள்பட, சிறு வியாபாரிகள் உள்பட, வீட்டில், அடுப்புமூட்ட வழியில்லாவிடினும், வெளியில் ஹோட்டும், பூட்டுமாய் வரவேண்டிய அவசியங்கொண்டவர்கள்உள்பட, அரைவயிறு கஞ்சிக்கு உதவிசெய்ய ஆளில்லாமல் பிச்சைபுகும் நிலைமையிலும் பெண்டுபிள்ளைகளுடன் தத்தளிக்கும் இல்லறவாசிகள் உள்பட மற்றவர் யாவரும்.

இவர்கள் நிலையென்ன? ஓரிருவருக்கு, ஓரிரண்டு வீடுகளுண்டு. சிலருக்கு வீடு ஒன்றிருந்தாலும், பாகஸ்தர் பத்துப்பதினைந்து பேர். மற்றுஞ்சிலருக்கு இருக்கும் வீட்டின் கூறைக்குமேலாக கடன் ஓங்கி நிற்கும். இன்னும் சிலரோ, வீட்டு வாடகையைக்கொண்டே வயிற்றைக்கழுவிவருபவர். இதில் கணவர்களை இழந்து, குடிக்கூலியையே நம்பியிருக்கும் பெண்டிரும் பிள்ளைகுட்டியில்லாமல் குடிக்கூலிக்காரரின் தயவால் பிழைத்துவரும் வயோதிகரும் அநேகர். இத்தகையோர்கள்தானே அதிக வரிகளால் கசக்கிப் பிழியப்படுகிறார்கள்! கார்ப்பொரேஷன் செய்துவரும் ஒவ்வொரு ஊதாரிச் செலவிற்கும், பொருப்பற்ற செலவினங்களுக்கும் அழுதுவருபவர் யாவர்? கழுதையுங்கூட சுமக்கும் வரை தானே முதுகைக்கொடுக்கிறது! கழுதையைக்காட்டிலும் கேவலமான நிலையிலல்லவா நடுத்தர வகுப்பைச் சேர்ந்தவர்கள் அநியாய வரிகளால் தாக்கப்படுகின்றார்கள்?

இது கமிஷனருக்கோ, கௌன்சிலர்களுக்கோ, கார்ப்பொரேஷனுக்கோ நியாயமா? என்றுதான் கேட்கிறோம். கண்டசெலவுகளுக்கு கை தூக்கவும், ஊதாரிச் செலவுகளுக்கு தலையை அசைக்கவும், நீட்டப்படும் பட்ஜெட்டுகளுக்கெல்லாம் கையெழுத்துச் செய்யவுமா கௌன்சிலர்கள் தேர்ந்தெடுத்து அனுப்பப் பட்டிருக்கிறார்கள்? இதுதானா வாக்காளருக்குக் காட்டும் நன்றி? என்னே விபரீதம்! இவைகளையெல்லாம் கவனித்துதக்கது செய்ய கவர்ண்மென்டாருக்கு ஆற்றல் இல்லையா? திறனில்லையா? எல்லாமிருந்தும் நடுத்தர வகுப்பார் மீது இரக்கந்தானில்லையா என்றே கேட்கின்றோம்.

கார்ப்பொரேஷனால் கொடுக்கப்படும் வசதிகளை அனுபவிக்கையில், வரியைச்செலுத்தத் தயங்கும் காரணமென்ன? அவர்கள் குபேர சம்பத்துடன் கூடகோபுரங்களில், வாழ்ந்தாலென்ன? அல்லது வருமையில்கிடைத்துகுடிசைகளில் குடியிருந்தால்தானென்ன? வசதியுள்ளவர்கள் சற்று அதிகமாகவே வரிகள் செலுத்தி ஆகவேண்டும் என்பது வெள்ளிடைமலை. குடிசைகளில்வாழும் ஏழைகளும் ஒரு சிறு அளவுக்காவது வரிசெலுத்துதல் வேண்டும் என்று சொன்னால் எம்மை பிசகாகக் கொள்ளார்கள்

என்றே எண்ணுகிறோம். மேலோரும் கீழோரும் பளுவைப் பகிர்ந்து கொண்டாலொழிய நடுத்தரத்தார் "நாளுக்குநாள் நகர்ந்ததுகாண். அம்மானே" என்று பாடவேண்டிய நிலையைத்தான் அடைவார்கள். இப்பொழுதும் அடைந்துதான் அல்லல்பட்டுவருகிறார்கள். இவ்வல்லல்களைத் தீர்க்கவேண்டியது கார்ப்பொரேஷனின் இன்றியமையாக் கடமையாகும். பொதுமக்களும் ஒத்துழைக்கவேண்டும்.

ஆட்சியாளரும் நிலைமையைக் கவனித்துக்கொண்டிருந்து, அவசியமேற்பட்டால் தங்குதடையின்றி தலையிடவேண்டும்.

சென்னைநகர எல்லைக்குள், பிரத்தியேக காரணங்களைக்கொண்டு விலக்களித்தாலொழிய, இரண்டு ஏக்கர் நிலமல்ல, இரண்டு செண்டுமல்ல ஆனால் இரண்டு இன்ச் இடம்கூட வரிகொடுப்பதினின்று விலகக்கூடாது. இவ்விதம் செய்தாலே ஒவ்வொருவரும் அத்தியாவசியமான, தம் யோக்யதைக்கு ஏற்ற வண்ணம், வரிகொடுக்கும் அளவுக்கு, திறப்பு நிலத்தை இருத்திக்கொண்டு பாக்கி இருக்கும் இடத்தில் சௌகரியம் இருந்தால் தாமே சிறு சிறு கட்டிடங்கள் கட்டிக் குடிக்கூலிக்கு விடுவார்கள். அல்லது தமக்கு உபரியாயிருக்கும் திறப்பு நிலத்தை பிறருக்காகிலும் விற்கிரயஞ்செய்ய முன்வருவார்கள். இதனால் கார்ப்பொரேஷனுக்கு வரி உயரும். வீட்டுக் கஷ்டமும் ஒரு அளவுக்காவது தீரும். இதனால் நடுத்தர வகுப்பினருக்கும் பலவித சௌகரியங்கள் தானாகவே ஏற்படும். அதனால் இனியேனும் கார்ப்பொரேஷன் இத்தகைய முக்கியங்களில் கவனம் செலுத்தித் தக்கதைச்செய்ய உடனடியாக முற்படுவார்கள் என்றே மிகவும் எதிர்பார்க்கிறோம்.

## மது விலக்கு 3

"எது இரவல் கேட்டாலும் மோர் செப்பில் ஒரே செப்பு" என்றேசொல்வர், சமய சந்தர்ப்பத்தைக்கவனித்து ஏற்படாத நடவடிக்கையைச் சுட்டிக்காட்டி. நெல் கேட்டாலும் ஒரே செப்பு, பருப்புக் கேட்டாலும் ஒரே செப்பு, உப்புக்கேட்டாலும் ஒரே செப்பு, கடுகு கேட்டாலும் ஒரே செப்பு, பெருங்காயம் கேட்டாலும் ஒரே செப்பு என்பதில் எவ்வளவு நியாயம் பொருந்தியிருக்கிறதோ அவ்வளவு நியாயமும் சற்றேனும் குறையாமல் அமைந்திருக்கிறது "மதுவிலக்கு" நடவடிக்கையிலும்.

பிற ஜில்லாக்களில் "மதுவிலக்கு" மிகவும் வெற்றிகரமாக நடந்தேறுகிறதென பலபேறும் சொன்னதுண்டு. மந்திரிமார்களும் சென்ற விடமெல்லாம் பீத்திக்கொண்டதுமுண்டு. ஆனால் விஷயமென்ன? சில தினங்களுக்கு முன்னால் ஆட்சியாளர்களாலேயே கொடுக்கப்பட்டிருந்த புள்ளி விவரங்களிலிருந்து "மதுவிலக்கு" சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை நேயர்கள் கவனித்திருக்கலாம். ஒன்றல்ல பத்தல்ல, நூறல்ல, ஆயிரமல்ல ஆனால் பத்தாயிரக்கணக்கில். இது குடித்திருந்ததாக குற்றம் சாட்டப்பட்டு தண்டிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை என்றே நினைக்கிறோம். இவர்களைக் காட்டிலும் அதிக எண்ணிக்கை கொண்டவர் கள்ளச் சாராயம் காய்ச்சியவர்கள். காய்ச்சியவர்களைக் காட்டிலும் குடித்தவர்கள் அதிகமாகயிருக்கவேண்டியிருக்க, புள்ளிவிவரங்கள் தலைகீழாக இருந்தாலும் இப்புள்ளிகள் பிசகென்பதிற்கில்லை. காய்ச்சுபவர்களே காசாசை கொண்டிருப்பதும், கிடைத்தாகவேண்டிய அவசியத்திற்கும் கட்டுப்பட்டிருப்பதுவே காரணமாகும். இதைப்பற்றியும் நமக்குக் கவலை இல்லை.

புள்ளிவிவரங்களிலிருந்தே காய்ச்ச்சியவர்களில் தண்டனைக்குள்ளானவர்கள் மாத்திரமே பத்தாயிரத்துக்கு மேற்பட்டிருந்தாலும் பத்தாயிரமென்றேவைத்துக்கொள்வோம். இப்பத்தாயிரமும் சட்டத்தை மீறியவர்களில் ஒரு பகுதியே என்பதை நிச்சயமாகச் சொல்லலாம். காய்ச்சியவர்கள் பூராவையும் கண்டுபிடித்துவிட்டார்கள், அல்லது அகப்பட்டுக்கொண்டார்கள் அல்லது அகப்பட்டவர்கள் எல்லாம் தண்டிக்கப்பட்டுவிட்டார்கள் என்று எத்தகையோரும் உறுதிகூற முடியாது. ஒரு கோர்ட்டில் அப்படியே தண்டிக்கப்பட்டாலும் 'நிரபராதி' யென்றால், அதைப்பற்றி கவலையும் இல்லை. காசு பணம் தான் வேண்டும். மேல் கோர்ட்டுகளில் நிரபராதி என்ற தீர்ப்பு. உண்மையாகவே ஏதொன்றும் மறியா நிரபராதி யென்றாலும் பணம் மாத்திரம் இல்லாவிடின் அவன் கதி அதோகதிதான். பணமில்லாதவனுக்கு வக்கீல்கள் ஏது, சாட்சிகள் எங்கே, மேல் கோர்ட்டுகள் உண்டா என்பன போன்ற விஷயங்கள் யாருக்குத் தெரியாதவை என்றே கேட்கிறோம்.

நியாயமிருந்தும் பணம் படைத்தோரிடம் வாதிக்க வசதியில்லாமல் சொத்துக்களையும் உரிமைகளையும் பறிகொடுத்துத் தயங்கி நிற்கும் ஏழைகளை வாயால் எண்ணவும் முடியுமா? ஒரு அடி மண்ணுக்காக முனைந்துகட்டி, ஆயிரக்கணக்கில் செலவு செய்து, கண்டவர்களுக்கெல்லாம் கொட்டிக்கொடுத்து, நிலம் பூராவையுமே விற்றுக்கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டும் அதை சற்றேனும் கவனிக்காமல் "வெற்றியடைந்து விட்டோம்" எனவே இறுமாப்புடன் மீசையை முறுக்கி, வெட்கமில்லாமல் வெளிவரும் அசடுகள் அநேகமிருக்க ஏழைகளால் என்னசெய்து எந்த வகையில் நியாயத்தை ரூபித்து நீதியடையமுடியுமென்று கேட்காமல் இருப்பதற்கில்லை. மதுப் பழக்கத்தால் கெடுபவர்கள் ஏழைகள் என்று சொன்னது ஆட்சியாளரேயாவர். அப்படியிருக்க "மது விலக்கு" சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட்டு வருபவர்களும், தண்டிக்கப்பட வேண்டியவர்களும் அவ்வேழைகளாகத்தானே இருக்க முடியும். மது விலக்கில் சில நன்மைகள் ஏற்படலாம். அதே சமயத்தில் "மது விலக்கு" சட்டத்தால் பல இன்னல்களும் ஏழைகளுக்குண்டு என்பதை மறுப்பதிற்கில்லை என்றே எண்ணுகிறோம். இன்னுமொன்று. ஏழைகள் சட்டத்திற் கிரையாவது தாம் செய்த குற்றத்திற்காகமாத்திரமல்ல ஆனால் பிறரின் க்ஷேமத்திற்காகவும், பணத்தைப்பெருக்க அலைவோரின் கைக்கூலிகளாகவும், வறுமையின் காரணமாக சில காசுகள் பெறவும், பேராசை பிடித்தவரின் தூண்டுதலுக்கும் மற்றவரின் உருட்டலுக்கும் பிரட்டலுக்கும் மிரட்டலுக்கும் உட்பட்டும் குற்றத்தை மேற்கொள்வோரும் உண்டு என்பதைத் தெரிய வருந்துகிறோம். அப்படி ஏற்றுக்கொள்வதற்கு காரணம் எதுவாயிருப்பினும், நாட்டுக்கும் மக்களுக்கும், ஆட்சிக்கும் செய்யும் மாபாதகத் துரோகச்செயலாகும். உண்மையாகவே குற்றஞ் செய்பவரை கண்டு பிடிக்க முடியாமல் செய்வது சாமான்ய குற்றமன்று என்பதை ஏழைகள் கண்டிப்பாக அறியவேண்டுகிறோம், இவ்விதம் செய்யத்துணிவது தம்மைத் தாமே கெடுத்துக்கொண்டதாகும்; சவக்குழி வெட்டிக்கொள்வதாகும் என்பதை அலக்ஷியப்படுத்தக் கூடாதென்றே கேட்டுக்கொள்ளுகிறோம்.

—: (x) :—

மூளைக்கு வேலை

# பகுத்தறிவு போர்க்களம்.

### விஷயம்:—மோட்டார் பஸ்களில் பெண்களைக் கண்டக்டர்களாக நியமிப்பது அவசியமா? நியாயமா?

### நேயர்களின் கருத்துக்கள்.

பெண்களின் அடிமைத்தனம் நீக்கப்பட்டுவரும் இந்நாளில்—சீர்திருத்தச் செம்மல்கள்-பகுத்தறிவு வாதிகள் அதிகமாகஉள்ள இக்காலத்தில்—ஆண்களும் பெண்களும் சமம்என்று கருதப்பட்டு வரும் இந்நாளில் சென்னை சர்க்காரிலே பஸ்களிள் கண்டக்டராக பெண்களை நியமித்ததிலே தவறில்லை-வியப்புமில்லை! மேல் நாடுகளிலே வான ஊர்திமுதல்கொண்டு விஞ்ஞானத்துறைவரையிலே முன்னேறிக்கொண்டுவரும் பெண்கள் உள்ளபோது இந்த திராவிடநாட்டிலே நமது பெண்கள் அரசமரங்களையும்-அம்மன்களையும் வணங்கி வரும் பழைமை புழங்கிவரும் இந்நாளிலே சிலபெண்கள் கண்டக்டர்களாக வேலைசெய்து-பெண்களும் வேலைகளை-கஷ்டமான வேலையையும் செய்வார்கள் என்பதை நிரூபிக்க பெண்கண்டக்டர்கள் வேலை செய்யவேண்டும்!

அரசாங்கத்தையே ஆளத் தகுதியுடைய பெண்கள்—ஆண்டு கொண்டிருந்த ராஜிமங்கம்மாளித் தலைமுறைகள் தோன்றிய நாட்டில் நமது பெண்கள் கண்டக்டர்வேலை செய்வதிலே தவறில்லை. ஆனால் பெண்கண்டக்டர்களை நியமித்திருக்கும் பஸ்ஸிலே ஆண்களின் கூட்டம் அதிகமாக இருக்கின்றனர்! ஏன்? புதுமை நிகழ்ச்சி என்பதைக்காணவே? அல்லவா! பெண்களிடத்திலே அவர்களின் திறமைகளைக்காட்ட! சில நாட்களுக்கு முன்பு பெண் கண்டக்டர்கள் உள்ள பஸ்ஸிலே பிரயாணம் செய்ய நேரிட்டது! அந்த பஸ்ஸிலே கீழ்வருமாறு நிகழ்ச்சி நேரிட்டது!

"டேய்! அந்தக்குட்டி பார்த்தாயாடா? ஷோக்கா இருக்கா!"

"ஆமான்டா! அதுக்காகத் தானே இந்த பஸ்ஸிலே பல தடவை போறேன்!"

மற்றும் பல! அந்த பெண் கண்டக்டர்களிடத்தே நெறிதவறுவதை தொழிலாக கொண்டுள்ளனர்! பெண்கன்டக்டர்களின் கற்பு கெட்டுவிடும் என்று கூறுகிறார்களேயன்றி—ஆனால் அந்தப் பெண்களிடத்திலே நெறிதவறும் விதத்திலே நாம் நடக்கின்றோமே என்பதை பல ஆண்கள் நினைப்பதில்லை! பெண்களின் முன்னேற்றத்திற்கு ஆண்களின் அசங்காரத் தன்மையும் அழிந்தாகவேண்டும் என்றும் ஆண்களும் ஒத்துழைக்க வேண்டும் என்று கூறி பெண்கண்டக்டர்களுக்கு ஓர் எச்சரிக்கையும் விடுக்கிறேன் இதன் வாயிலாக!

"பெண் கண்டக்டர்களே உஷார்! ஆண்களோடு சரிசமமாக வேலைச்செய்ய முடியும் என்பதை நிரூபிக்க நீங்கள் மன உறுதியை—தைரியத்தையும் கைவிடாதீர்கள்!" என்று கூறி பெண் கண்டக்டர் இருப்பதிலே தவறு இல்லை என்று கூறி இதனை முடிக்கிறேன். இப்படிக்கு

சென்னை 1 பி. . இராஜீஸ்வரி.

ஜபல்பூர் வட இந்தியா

கண்டக்டர்களாகப் பெண்களை நியமிக்கலாமா! நல்ல கேள்வி. இதேபோல், மேல்நாடுகளில் இக்கேள்வி கேட்டால், விழுந்து, விழுந்து சிரிப்பார்கள். நிற்க மதராஸ் பெண்களை, மதராஸிச் உள்ள பஸ்களில் கண்டைக்டர்களாக்கலாமா என்பதற்கு எதிர்ப்பும் இருப்பதாக தெரிகிறது. ஆனால் வடநாட்டுப்பெண் விஜயலக்ஷுமி பண்டிட், ரஷ்யாவில் இந்தியப்பிரதிநிதியாக இருக்க எவ்விதத்தடையும் இல்லை. இதைப்பற்றி கேள்வி கேட்பாரும் இல்லை. ஏன்?! தலையில் முக்காடிட்டு. முகம் தெரியாமல் இழுத்துமூடும் பழக்கமுள்ள வடநாட்டுப்பெண், அன்னிய நாட்டில் உத்தியோகம் பார்த்தால் நாகரீகத்தில் மிகவும் முன்னேறிய (வட நாட்டைவிட) தென்னாட்டுப் பெண்கள், தென்னாட்டிலேயே உத்தியோகம் பார்க்கத்தடை என்றால் தென்னாட்டில் நாகரீகம் இருந்தும் அறிவீனம் போகவில்லை என்பது தான் அர்த்தம் மதராஸ் சர்க்கார் இதைக் கவனித்து நாகரீகத்திலும், அறிவிலும், மற்ற நாடுகள் மிகவும் முன்னேறிக் கொண்டிருப்பதால் நம் பெண்களைக் கண்டக்டர்களாக மட்டும் அல்ல டிரைவர்களாகவும் நியமிக்க ஏற்பாடுசெய்வார்கள் என்று நம்புகிறேன். இப்படிக்கு

அழகன்.

குறிப்பு:—எக்கருத்துக்கும் இடமுண்டு. அறிவுக்குப் பொருந்திய தக்க நியாயங்களே தேவை. (ஆ. ர்.

# கனம் கல்விமந்திரியார் அவர்கள் பார்வைக்கு

—: (x) :—

கனம் கல்வி மந்திரியார்
ஸ்ரீலஸ்ரீ அவிநாசிலிங்கம் செட்டியார்
அவர்களுக்கு நமக்கம்.

சென்னை மாகாணக் கல்வி பிரம்மா அவர்களே! அடியேனுக்கு ஏற்பட்டுள்ள சில சந்தேகங்களைத் தங்கள் திருமுன் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன் என்பதையும், தங்களையோ தங்கள் ஆட்சியையோ, கட்சியினரையோ குறைகூறும் நோக்கம் ஏழையென் மனத்தில் இல்லையென்பதையும் முன்னதாகத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

"நமக்கம்" என்று முதலிலேயே நான் ஏதோ வக்கணை பேசுவதாகத் தாங்கள் சந்தேகிக்கலாகாது. இதில் எந்தவிதமான சூதா சூழ்ச்சி கிடையாது. ஆட்சி மொழியாகப்போகும் ஹிந்தியில் கூறப்போகும் நமஸ்தே என்பதையும் தமிழ்மொழியான (இந்திவந்தால் சிலர் தமிழ்மொழி அடிமை மொழியாகிவிடுமோ, என்றும் அஞ்சுகின்றனர், ஆங்கில மொழியால் பட்ட சூடினால். ஆனால் நான் இக்கருத்தை ஆதரிப்பதாகத் தாங்கள் தவறாக எண்ணலாகாது) வணக்கம் என்பதையும் இணைத்து நமக்கம் என்று புதுச்சொல் கண்டிருக்கிறேன். இது அரசியல்மொழியிலும் தாய்மொழியிலும் கொண்டுள்ள ஆர்வத்தின் எதிரொலியே யாகும். வேறொரு "கள்ளங்கபடு" கிடையாது.

நிற்க என்சொந்த அனுபவங்கள் சிலவற்றை—அதுவும் என்சொந்த சந்தேக நிவர்த்திக்காகத் தெரிந்துக் கொள்ள விரும்புகிறேன்.

நான்ஒரு மாசி (கிராமங்களில் மாஜி என்பதனை உச்சரிப்பது மாசி என்றே) கிராமவாசி. அதாவது நான் பிறந்தது கிராமத்தில். ஆனால் வயதடைந்து படித்ததும், இப்போது வயிற்றுப் பிழைப்புக்காக வாழ்வதும் நகரத்தில். நாங்கள் தலைமுறைதத்துவமாக உழவர்கள். நான் ஒருவன்தான் இதற்கு விதிவிலக்கு நான் இவ்விதம் "விலக்கானது" எதனால் என்று கேட்கலாம். அந்தக்கதையையும் சொல்லி விடுகிறேன்.

என்தகப்பனார், நான் குழந்தையாக விருக்கும்போது, பத்து ஏரு இருபது ஏரு கட்டிஉழும் பெரிய மிராசுதாராகத் தானிருந்தார். பணக்காரர் என்றால், பகைவர்களும் இருப்பது சகசம் என்பது தங்களுக்கும் தெரிந்ததே. பணக் கொடுக்கல் வாங்கல் தகராறுகளும் வாய்க்கால் வரப்புத் தகராறுகளும் எவ்வளவோ நேரிடும். இந்தப்படி சச்சரவுகளால், என்தகப்பனாரும் கோர்ட்டுக் கச்சேரிக்கு அடிக்கடி போய்வரவேண்டியதாயிற்று. ஐகோர்ட்டு அப்பிச்சிக் கவுண்டரென்றும் பட்டம்பெற்றார். வக்கீல்களுக்கு ஆயிரக்கணக்கான ரூபாய்களைக் கொட்டினார். இதற்காகச் சில நில புலன்களையும் கொதுவை வைக்கவும் விற்கவும் நேரிட்டது இதைக்கண்டு என் 'அப்பாவுக்கு' ஒரு ஞானோதயமாயிற்று. அதாவது 'நம்ம குடும்பத்திலேயே ஒருத்தர் வக்கீலாகி விட்டால் இந்த வக்கீல் செலவுக் கொள்ளையில்லாமல் போகுமே' யென்று. இந்த அபாரயோசனையின் மீதுதான் என்னை பட்டிணத்திலே படிக்க வைத்தார். நான் வக்கிலானதும் பொதி பொதியாக சம்பாதித்துக் கொட்டுவேனென்று எண்ணமிட்டு தான். அவரும் எனது "வக்கில் இங்கிலீஷ்" படிப்புக்காக மிடாமிடாவாக செலவழித்தார்—சில நிலபுலன்களையும் விற்கவும்செய்தார்.

இங்கிலீஷ் எழுத்துக்கள் ஒவ்வொன்றாகத் தெரிய தெரிய நானும் வேஷத்திலும், பழக்கவழக்கங்களிலும் இங்கிலீஷ் காரனாகவே மாறிவந்தேன். பத்தாவது வகுப்பை எட்டிப் பார்ப்பதற்கு முன்னர் ஹாட் சூட் பூட் கிராப் துரையாகி விட்டேன். பணம் ஆற்றில் கொட்டிய உப்புப் போலத்தான் செலவாயிற்று. போதாததற்கு (சிகரட்) புகையும் புகைத்துத் தள்ளிற்றுக் கொள்ளை பணத்தைநான் காலேஜில் படிக்கும்போது சாப்பிடுவதிலும் துரையாகிவிட்டேன். அதாவது சூட் பூட்டுடன் நாற்காலி மேஜை சாப்பாட்டுக்காரனாகி விட்டேன். கிராமத்திலும் இந்த வேடம்தான். அங்கே சாப்பாட்டு மேஜை நாற்காலியாக பானைவைக்கும் நாற்காலி பீடத்தையும் முக்காலியையும் உபயோகித்தேன். பத்தாயிரம் ரூபாயும், பத்துக்காணி நிலமும் போனதுதான்கண்டபலன். வக்கீல் படிப்பு சொல்லித்தரும் இடத்தை கூட நான் எட்டிப்பார்க்க முடியவில்லை. மாசி மணியமான எங்கள் பெரியப்பார் சிபார்சினால் இப்போது தாலுகாபீஸ் குமாஸ்தாவாக இருந்துவருகிறேன். இங்கிலீஷ் படித்த பாவத்தால் நான் கவலை, ஏர், பிடிக்கவும் யோக்கியதையும் வலிவுமில்லாதவனாகி விட்டேன்.

இப்போது நாற்பது வயதாகாத முன் நான் முதுகு கூன் விழுந்து, பொட்டைக்கண்ணனாகி கண்ணாடியணிந்து, எண்பது வயது கிழவனைப்போலாகி விட்டேன். இந்த இங்கிலீஷ் படிப்பு விதைத்த இந்தப் பழியை மனத்தில் நினைத்தாலே இப்போது என் மனம் கிடுகிடுவென்று நடுங்குகிறது. நான் படித்தசெலவுக்காக கணக்குப் போட்டுக்காட்டி என் தம்பிகள் எனக்கு நிலமே இல்லாமல் செய்துவிட்டனர். குமாஸ்தா வேலையில் கிடைக்கும் 40-50ரூபாயைக் கொண்டுதான், இந்தப் பணப்பெருக்க யுகத்தில் அரை வயிறு கழுவி வருகிறோம்.

இந்த நிலைமையில் இப்போது மற்றொரு திகில் ஏற்பட்டுவிட்டது. அதாவது தாங்கள் இந்தியைக் கட்டாயப்படிப்பாக்கியது தான் இந்த திகிலுக்குக் காரணம்: என் பையன் இந்தி படிக்க ஆரம்பித்த முதல் மாதத்திலேயே, கனம் பண்டித நேருவைப்போல் உடையுடுத்த ஆரம்பித்து விட்டான். சத்தக்கதரில், ஜிப்பா, பைஜாமா, வெஸ்ட் கோட்டு, குல்லாய் எல்லாம், முக்கால் டஜன் தைக்கும்படி தொல்லைபடுத்துகிறான். இல்லாவிட்டால் இந்திபடிக்க முடியாதென்று பிடிவாதம் செய்கிறான். நான் செய்துவரும். சர்க்கார் ஊழியத்தைக் காப்பாற்றிக் கொள்ள, நானும் என் மனைவியும் பட்டினிகிடந்தும் கடன்பட்டாயினும், இந்த உடுப்புகளைத் தைத்துக்கொடுக்க வேண்டியிருக்கிறது. இதுதான் போகட்டுமென்றால் இவனுடைய ஜீவனோபாய எதிர்காலத்தை எண்ணிப் பார்க்குமிடத்து எனக்கு ஏனோ திகில் மேல் திகில் ஏற்படுகின்றது.

நான் வட நாட்டுக்குச் சென்றதில்லை. அங்கே வட நாட்டார் என்ன உத்தியோகம் செய்கின்றனரென்றும் எனக்குத் தெரியாது. எங்களூர் நாயுடு ஒருவர் வடநாட்டில் ரயில் உத்தியோகத்திலிருக்கிறார்: அவர் சொல்லுகிறார்: அங்கே சர்க்கார் உத்தியோகமெல்லாம் தென்னாட்டவர்தான் பார்க்கிறார்களென்றும்—சேட்டுகள் எல்லாம் வியாபாரிகள் தானென்றும். என் பையனும் தானும் "சேட்" போல வியாபாரியாவதாகப் பிடிவாதம் செய்தால் என்ன செய்வது? பணத்திற்கு எங்கே போவேன்? மற்றும் எங்களூரில் குரங்கு சேட்டும், குல்லா சேட்டும் போன்ற சிலர்தான் வியாபாரத்தில் ராசாக்களாக விருக்கின்றனர். லட்சம் லட்சமாக சம்பாதிப்பதாகக் கேள்வி. இவர்களைத் தவிர்த்து நான் கண்ட சேட்டுகள் "கரம்சோறு" (சுண்டல்) விற்பவர்களும் "பம்பாய் மிட்டாய்" "லாலா மிட்டாய்" கல்கண்டு பேரீட்சம் பழம் விற்பவர்களும் தான். பஞ்சாபிகள் சிலர் இங்கிலீஷ் ரேகை சாஸ்திரிகளாக வருகின்றனர்.

பெரும் வியாபாரத்தில் முதல் போட எனக்கு யோக்கியதை கிடையாதே: ஆகவே ஹிந்திபடித்த பின் என் மகன் இந்த "கரம் சோறு" வாலாவாகி விட்டால் என்ன செய்வதென்று தான் எனக்குக் கவலையும் திகிலுமாகி விட்டது. இதற்குத் தாங்களே ஏதாவது பரிகாரம். சொல்லும்படி தாழ்மையுடன் கும்பிட்டுக் கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியில் ஒரு சந்தேகம். என்னாங்கோ; நம்ம காங்கிரஸ் தலைவர் ஸ்ரீஜத் காமராஜ நாடார் அவர்களே, கொஞ்ச நாளுக்கு முன் ஹிந்தியை கட்டாயமாகப் படிக்க வேண்டுமென்றாரே: இப்போது பார்த்தால், 'தங்கள் தலையிலல்லவா இந்தக் கட்டாய இந்திப் பழியைப் போட்டுவிட்டுத் தன் தலையிலடித்துக் கொள்கிறாரே! இதென்ன கூத்து? இதென்ன மர்மம் நாடகம்? இதிலிருந்து இந்திபடிக்க வேண்டுமா வேண்டாமா என்று சந்தேகம் ஏற்படுகிறதே! ஏழை குமாஸ்தா குடுத்துணிகளுக்கு 50-60 வீண் செலவு செய்வதென்றால் தாங்க முடியாதே! பையனுக்கு உடுப்பு தைத்து வீணாகிவிட்டால் மோசம் பாருங்கள்! எனவே என்னைப் போன்ற ஏழைகளின் மீது கருணா கடாட்சம் செலுத்திக் கொஞ்சம் சீக்கிரமாக இந்த ஹிந்திப்படிப்பில் நிரந்தரமான முடிவு செய்யும்படி உங்கள் காலில் விழாத குறையாய் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு தங்கள்
தாழ்மையுள்ளவனாய் இருக்கிறேன் ஐயா!

தாலுகாபீஸ் குமஸ்தாவான
மாசி கிராமவாசி.


வாசித்தாகவேண்டிய புத்தகம்.
"உடுமலை பீரங்கி"
(முதல் புத்தகம்)




120 பக்கங்கள்
பிரதி 1 க்கு விலை அணா 12.
தபால் சார்ஜ் வேறு
பீரங்கி புத்தக நிலையம்,
33. திருவேங்கிட முதலித் தெரு,
பெரியமெட்டு, சென்னை. 3


## ஆதரவு கூட்டம்.

—: (o) :—

உடுமலை பேட்டை 11-11-48

இன்று மாலை 5½-மணிக்கு உடுமலை நகர திராவிட கழகத்தின் அங்கத்தினர்களும், அனுதாபிகளும் கொண்டதோர் செயற் குழுவினர் கூட்டம் நடந்தது. தோழர்கள், இரா. தங்கவேலு. M. S. கனகராசன், கனகசுந்திரம், குருசாமி, மற்றும் பல தோழர்களும் இந்தியை எதிர்த்துக் கண்டித்து பேசி தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

**தீர்மானங்கள்:—**

1. இந்தியை கட்டாய மாக்கப் படுவதை கண்டித்தும், அறவே ஒழிக்கப்படவேண்டும் என்றும்,
2. இந்தி எதிர்ப்புக்கு கிராமங்கள் தோறும் சென்று சொற்பொழிவு செய்யவும்,
3. பொதுக் கூட்டம் கூட்டி, இந்தி எதிர்ப்பு விஷயமாக விளம்பரம் பொதுமக்களுக்கு செய்வித்தலும், ஷை கூட்டம் நடத்த நாள் குறித்து, தலைவர், பெரியார். ஈ. வே. ரா. அவர்களுக்குத் தெரிவித்து தோழர்கள் T. K. சீனிவாசனையும், மு. கருணாநிதியையும் அனுப்பி வைக்கும்படிக் கேட்டுக் கொள்வதென்றும்,
4. நகரத்திலும், கிராமத்திலும், சந்தாதாரர்கள் சேர்ப்பதும் என தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

தலைவர் வந்தனோபசாரம் கூற கூட்டம் இனிது முடிந்தது.

(ஒ. நி)

# ஈரோட்டு லெனினுக்குக் கிடைத்த ஸ்டாலின்

———: (o) :———

[ து. கணேசன். ]

அறிஞர் அண்ணு தமிழரின் தளபதி. இவரால் தமிழ்மணம் மூலை முடுக்குகளிலும் நாடு, நகரங்களிலும், பட்டிதொட்டிகளிலும் தழுவ ஆரம்பித்து விட்டது. திராவிட தமிழ் மக்களிடமிருந்து அவர் அன்பையும், மதிப்பையும் அளவு கடந்த பாசத்தையும் பெற்று விட்டார்.

குள்ளமான உருவம். குறுகுறுப்பான பார்வை. எடுப்பான ஆழ்ந்த கருத்துடைய பேச்சு ஓய்வறியாத உழைப்பு முடுக்கான தோற்றம், மறத்தமிழரின் மாட்சியை மாநிலம் அறிய மொழிப்போராட்டம் துவக்கினர். வீழ்ச்சியுற்ற தமிழகத்தில் எழுச்சியை ஊக்குவித்தார். விசை ஒடிந்த தேகத்திற்கு வன்மை ஊட்டினர்.

பெரியாரின் புரட்சி எண்ணத்திற்கு புதுமை ஊட்டின புத்துலக சிற்பி. இளம் மாணவர்களுக்கு புதுவாழ்வை பெற்று. தந்த பெருந்தகை அவரே. வாடின தாமரையென கிடந்த தமிழகம் வளம்பொருந்திய தடாகமாக மாறிற்று. சேலத்திலே சிங்கக்குரல் தந்த அண்ணு, திருச்சியிலே வீரமுழக்கமிட்ட காஞ்சி வீரன் பல்கலைகழகத்தை பகுத்தறிவு சாலையாக மாற்றித் தந்தார். பெரியார் கண்டு எடுத்த முத்துமணிக்கு முழுஅழகு கொடுத்து, புலவர் கூட்டத்தை இயக்க வீரர்களாக ஆக்கித் தந்த இணையற்ற அறிஞர்!

மக்களின் நல்லுணர்ச்சியில் நஞ்சு தடவப்படாமல் பிரசார மேடையை இயக்கினர். மக்களை மாக்களாக்கும் இராமகதைக்கு, கசைஅடிகொடுத்து, கம்பனின் இனத் துரோகத்தை இடித்து இடித்து இதயத்தைதொடுமளவில் கூறினர்'' தித்திக்கும் தமிழிலே,

திராவிடநாட்டின் தன்னலமற்ற தியாகி அவரே சீர்திருத்த செம்மல் அவரே. மக்கள்கட்சியே தமதுகட்சி என்று நாடாள வந்தவர்களுக்கு நல்ல முறையிலே நன்னெறி செப்பினர். ஆதிக்கம் பொருந்திய; அட்டூழியம் நிறைந்த, ஆபாசம் பொருந்திய, ஆரியரின் மூடப்பழக்கமென்னும் முயை நாற்றத்தை அம்பலப்படுத்திய அறிஞர் அவரே!

மதத்தை வெறுத்தார், மதமென்னும் பேய்பிடியாதிருக்க வேண்டுமென்று வடலூர் இராமலிங்கம் கூறியதை வற்புறுத்தினர். சாதி, குலம், பேசித்திரியும் சழக்கர்களை சாட்டை கொண்டு அடித்தார். அறிவுஎன்னும் ஆயுதத்தால் பிற்போக்கு சக்திகளை பிய்த்துத் தள்ளினர். திராவிடநாடு திராவிடருக்கே என்பது ஒரு கட்சியினரின் காட்டுக்கூச்சல் என்று கூறி திரிந்த ஆரிய வட்டத்திற்கு, அது கட்சியின் முழக்கமல்ல, இனத்தின் இதயபரணி என்ற அணுகுண்டை அஞ்சாது வீசின ஆண்மையாளர் அவரே!

தமிழ்த்தாயின் தளர்வுற்ற நரம்புகளுக்கு முறுக்கேற்றிக் கொடுக்கும் முத்தமிழ் அன்பர் சலியாத உழைப்பு கடுமையான ஆராய்ச்சி அசைந்து கொடுக்க முடியாத கொள்கை தோல்வியைக்கண்டு தயங்காத மனப்பான்மை உறுதியும், ஊக்கமும் கொண்ட அறிவின் செல்வர். ஆரியத் தவளைகளுக்கு ஒரு பாம்புவாயிலிருந்து பேசதுணிவைத்தார். ஊக்கமிழந்து தளர்ச்சியுற்று நின்றோரை உற்சாகமுற்று உரம்பெற்று நிற்கவைத்தார். புரட்சி எண்ணத்தை, புதுமை கொடுக்கும் கருத்துக்களை நெஞ்சில் நிலைநிறுத்தின நேர்மையாளர், அயர்வுகொண்ட மக்களது உள்ளத்திலே, அறிவுகனலை மூட்டின அஞ்சாநெஞ்சு படைத்த சிங்கம் அவரே! வாலிப உள்ளத்தின் வசீகரமதி செந்தமிழ்ப்புலவர் தமிழர் தம் உள்ளங்கவர்ந்த அன்பர் மதத்தினை ஆராய்ந்து, மூட கோட்பாட்டுக்களை அறுத்து மனிதனை மனிதனுக்கி உரிமைப்போரில் குதிக்க எத்தனிக்கும் எழையின் அரசன் வெண்தாடி வேந்தரின் வலதுகரம் சுற்றிற் சுழன்று சுருவளியையும் உள்ளே புகுந்தால் நேரிடும் ஆபத்துக்களையும் கொஞ்சமும் பொருட்படுத்தாது கூச்சம் அச்சமின்றி ஒளிவுமறைவின்றி அறிவைப்பரப்பி வரும் ஆண்டகை அறிவு இயக்கத்தின் ஆணிவேர். களத்திறகு அஞ்சா காளை! இளம் எறு! முதலாளி தத்துவத்தையும் எகாதி பத்தியத்தையும் எதிர்த்து மனக்கொதிப்புடன் திராவிட இனத்தாருக்கு உண்மையை விளக்கிய மதிவாணர்! இருளில் ஏங்கிக்கிடந்த மக்களுக்கு இறையொளியை கொடுத்த இளமதி!

**வாழ்க நம் தளபதி.**

**வாழ்க திராவிட நாடு!**

———: (x) :———

## விஞ்ஞான யுகத்தில் விநோதம் பார்!

சென்னையை யடுத்துள்ள தண்டுகை பட்டாபிராம் கிராமத்தில் 12-11-48ல் ஒரு விசித்திரம் நடந்ததாம்; மழையை வருவிக்க கிராமத்திலுள்ள கிழவிகள் அனைவரும் அருகிலுள்ள ஏரிக்குச் சென்று, சாவு வீட்டில் அழுவதுபோல் கைகோர்த்துக் கொண்டு, ஒப்பாரி வைத்து மாரடித்துக் கொண்டனராம்.


## விற்பனைக்கு.

**மதருஸ் மௌன்டு ரோடு,**

வட்டாரத்தில் சுமார் $1\frac{3}{4}$-மனை கட்டுக்கோப்பு வீடும் மனையும்.

**எழும்பூர்,**

கெங்கு ரெட்டித் தெருவில், கட்டுக்கோப்பு வீடும் மனையும்.

**புதுப்பேட்டை,**

லேங்ஸ் கார்டன் ரோடு, சுமார் $5\frac{3}{4}$-மனையும்-பங்களா—காம்பவுண்டு வகையராவும்.

## தேவை - கடன்கள்.

பொறுக்கி எடுத்த மதருஸ் சொத்துக்களின் பேரில் ரூ. 1000, லிருந்து ரூ. 50,000, வரையும் கடன்கள் தேவை. நியாயமான வட்டி கொடுக்கப்படும்.

மற்ற விவரங்களுக்கு:—

டெலிபோன்: 2597.

**B. R. & Sons.**

(ஸ்தாபிதம் 1931)

33, திருவெங்கிட முதலித் தெரு,

பெரியமெட்டு, மதருஸ் 3.


# ஏழை படும் பாடு?

[ ஆ. இராசமாணிக்கம் ]

ஆம். முனிசாமி திருடனு? முனிசாமி ஓர் வேலையாள். அவனுக்கு இரு குழதைகள் உண்டு. அவன்வேலை செய்துதான் அவர்கள் குடும்பம் நடக்க வேண்டும். ஒரு வாரமாக ஒரே மழை. எங்கும் வேலை கிடைக்கவில்லை. அதன் காரணமாக அவன் குடும்பம் மூன்று நாள் முழுப்பட்டினி. இந்த நிலைமையில் ஒரு குழந்தைக்கு சுரம் கடுமையாக இருக்கிறது. வைத்தியருக்குக் காசில்லை. முனிசாமிக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. பைத்தியம் பிடித்தவன்போல் தெருத் தெருவாக அலைந்துகொண்டேவந்தான். இருளும் சூழ ஆரம்பித்தது.

ராவ்பகதூர் ரங்காமுதலியார் வீட்டில் மட்டும், மின்சாரவிளக்கு மினுக் மினுக்கென் றெரிந்துகொண்டிருந்தது. அதன் எதிரே ஓர் உருவம் முகம்மறைய முக்காடிட்டுக்கொண்டு, போவதும், வருவதும், நிற்பதும்; தனக்குத் தானே ஏதேதோ பேசிக்கொள்வதுமாக இருந்தது. அவ்வுருவம் :-" சீ திருடுவதா! திருட்டுப்பயல் என்று ஊரார் பழிப்பார்களே. ஊரார்! இன்னும் சிறிதுநேரத்தில் உலகைவிட்டுப் பிரியும் நிலைமையில்; மரணப்படுக்கையில் கிடக்கும் உன் குழந்தையைக் கண்டும், உதவ மனம் வராத ஊரார்; தெருத் தெருவாய்த் திரிந்து தெண்டனிட்டுக் கேட்டும் கல்நெஞ்சர் கடுகளவும்கருணையின்றி, உதவாமல் கடுத்துப்பேசிய ஊரார்; தங்கள் ஊரிலே, தங்களைப் போல் மனிதர் இளஞ்சேய்களுடன் மூன்று நாள் பட்டினியால்பதைப்பதை கண்டும் கலங்காத -கேட்டும் ஒருரூபாய் கைமாற்றுத்தராத- ஊரார்! உரிமை ஏது உன்னைப்பழிக்க அவர்களுக்கு? நேரமாகிவிட்டது. எல்லோரும் தூங்கிவிட்டார்கள். செல்! அகப்பட்டதைச் சுருட்டு! போ! போ!! என்பது அவன் உள்ளம் அவனை ஊக்குவிக்கக் கூறிய சமாதானம்; உணர்ச்சிவேகத்தில் மெல்லென வெளிவந்தனபோலும்.

சிறிதுநேரத்திற்கெல்லாம், அவ்வுருவம், ராவ்பகதூர் ரங்கா முதலியாரின் மேல்மாடிச் சாளரத்தை உடைத்துக்கொண்டிருந்தது. சாளரத்தின் கதவுகள் பெயர்த்தெடுக்கப் பட்டன. அவ்வுருவய் உள்ளே சென்றது. அந்த அறையில்த்தான் ராவ்பகதூர் ரங்கா முதலியார் தூங்கிக்கொண்டிருந்தார். அறையினுள் நுழைந்த உருவம் அறையின் பலஇடங்களிலும் எதையோ தேடியது. இரும்பு -இருப்பு- ப்பெட்டியினருகில் சிறிதுநேரம் தடவிப்பார்த்துவிட்டு பெட்டியைத்திறந்தது. அதிலிருந்த நோட்டுகளடங்கிய கட்டை எடுத்துக்கொண்டது. திரும்பிச் செல்கையில் இருளில் நாற்காலியொன்றில் மோதிக்கொண்டு தடாலென்று கீழே விழவே சத்தம் கேட்டு விழித்துக் கொண்டார்கள் வீட்டிலுள்ள பலர். ராவ்பகதூரும் விழித்துக்கொண்டார். தமதறையின் விளக்கைப்போட்டார். இதற்குள் விழித்தெழுந்த வேலைக்காரர்களெல்லாம் அவ்விடற்திற்கு ஓடிவந்தனர். அவ்வுருவம் ஓடப்பார்த்தது. வெளிச்சத்தில் நாலாபுரங்களிலுமிருந்தும் ஓடிவரும் (ராவ்பகதூருடைய) வேலையாட்களிடமிருந்துகூட தப்பிவிடுவானு எவனுவது! ராவ்பகதூர் போலீ போலீசுக்கு போன்செய்தார். அடுத்த சிலநிமிஷத்திலேயே போலீசார் வந்துவிட்டனர். போலீசாரால் அவ்வுருவம் கைதுசெய்யப்பட்டது. ஆம் முனுசாமி சிறையிலிடப்பட்டான். இயற்கையை எதிர்க்க சக்தியற்றதினுல்; இரக்கமற்ற நெஞ்சினனுய் பெண்டுபிள்ளைகளை தவிக்கவிட்டு, ஒருவருக்கும் தெரியாமல் ஊரைவிட்டு ஓடி சந்யாசி என்று கூறி தன் வயிற்றை நிறப்பிக்கொள்ளும் மந்திரம் கல்லாத குற்றத்திற்காக) ராவ்பகதூர் வீட்டில் திருடியதாக குற்றஞ்சாட்டப்பட்டது அவன்மீது. விசாரணை நடந்தது சிலநாளுக்குப்பின். நீதிபதி கேட்டார்: நீ திருடியது உண்மைதானே' என்று. அதற்கவன் கூறிய வாக்குமூலம்இதுதான் :- அன்புமிக்க நீதிபதியவர்களே! நான் திருட்டுக்குற்றஞ்சாட்டப்பட்டிருக்கின்றேன். ஆம் நான் திருடினேன் அது மறைக்க முடியாத உண்மை. ஆனுல் பல திருடர்கள் தினமும் திருடிக்கொண்டிருக்கின்றனர் வேறுபோர்வையில், அவர்களெல்லாம் தண்டிக்கப்படவில்லை. ஆனுல் வாட்டும் வறுமை தாங்காது, மூன்றுநாள் பட்டினி கிடந்து பசிவேதனை தாளமுடியாததால் திருடினேன். நீதிபதியவர்களேநான்மட்டுமா திருடன்? நாட்டிலே உள்ளபொருளை இல்லையென்றியம்பி உயரிய விலைக்கு விற்கும், ஊதாரிச்செயலைச் செய்து செல்வந்தராய், சீமான்களாய் பொது மேடைகளில்த்தோன்றும், புண்ணியராய் உலவுகின்ருர்களே அவர்கள் செய்கையை என்னென்று கூறுவது? படித்தறியாத பாமர மக்களை பகவான் பேரைசொல்லி எய்ப்போரை என்ன பெயரிட்டழைப்பது? என்று எதிர்வாதம் செய்தான்.

சட்டம் கற்பிக்கப்படும் வழக்கு மன்ரத்தில் மதிக்கப்படுமா, வக்கீல் வைத்துக்கொள்ளாத வைத்துக்கொள்ளசக்தி இல்லாத அவன் பேச்சு! சட்டத்தைக் காப்பவர்கள் சிறைதண்டனையல்லாமல் வேறென்னதான் கொடுப்பார்கள் அவன் எதிர்வாதத்திற்கு மெச்சி! ஆனுல் என் மனம் ஏனே தவித்தது அந் நீதிமன்றத்திலிருப்பதற்கே முடியாதபடி.

———: (x) :———


## இன்ப ஜோதி

**முன்னணி வெளியீடு**

ஆசிரியர், **பாண்டியகுமாரன்.**

இன்பஜோதி ஒரு சமூக சீர்திருத்த புத்தகம். சமூக முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக இருந்துவரும் மூடமதப்பற்றுகளினுலும் படோடோபத்தினுலும் ஏற்படும் விளைவுகளை சித்தரித்துக் காட்ட முற்படுகிருர் ஆசிரியர். லட்சியப் பாதையில் முன்னேற வேண்டிய கதாநாயக நாயகிக்கு தன் அசட்டுக் கௌரவத்தால் சமாதி கட்டுவிக்கிருன் உயிர் தோழனுகிய ரகு. நாடகக்கலைக்கு ஒரு வகையில் பயன் படக்கூடியதே. நல்ல முகப்புடையது. இந்நூலுக்கு தமிழ் அன்பர்களுடைய நல்வரவு கிடைக்கும் என நம்புகிருேம்.

இந்த மதிப்புரையையே ஊக்குவிக்கும் தக்க கோலாக் கொண்டு ஆசிரியர் மேலும் நல்ல வகையில் பணியாற்ற முற்படுவார் என்பது எம் நம்பிக்கை.

பக்கம் 62, விலை ரூ. 1—0—0

(தபால் கூலியுள்பட.)

கிடைக்குமிடம்:—

**இன்ப நிலையம்**

சங்கர் நகர், **புதூர், மதுரை.**

தொடர் கதை

# லக்ஷம் ரூபாய் நக்ஷத்திரம்

——: (o) :——

[முன்வாரத் தொடர்ச்சி]

[ "பிவியார்" ]

கொடிய விரோதியாயிருப்பினும், "வா" என்று சொல்லிவிட்டுத்தான் வீட்டிற்குள் மறைந்து கொள்வார்கள்.

இந்த இன்ஸ்பெக்டர் ஐயாவை அவள் முன்பே பார்த்ததுண்டு. ஆனல். நெருங்கிப்பேசியது கிடையாது. சௌந்தரம்மாளிடம் அடைந்த அனுபவத்தால் காமாட்சி நாதனும், "பெண்ணினத்தாரிடம்" கொஞ்சம், அண்டாமைப் போக்குடன்தான் நடந்து வந்தான். தங்கம்மாள் தனித்திருப்பதை முன்பே அறிந்திருந்தால், இங்கு வந்திருக்கவும் மாட்டான்.

"வாங்கோ சாமி" என்ற ஒலியைக் கேட்டு, அவன் தலையைத் திருப்பிப் பார்த்தபோதுதான், தங்கம்மாள், தனித்து நிற்பதைக் கண்டான். அவன் மனதில் கொஞ்சம் குழப்பமேற்பட்டது. பின்வீட்டிற்குள் குனிந்து பார்த்தான். சாதாரண குடியானவர்கள் வீட்டிற்குள் பெரும்பாலும், ஒரு ஆசாரமும், அதில் சமையலுக்காக கைப்பிடிச்சுவர் வைத்த அடுப்பறையும்தான் இருப்பதுவழக்கம், எனவே உள்ளே இருப்பவர்களை வெளியிலிருந்து பார்க்கலாம்.

தங்கம்மாள் அவன் யாரைத் தேடுகிறனென்பதை யூகித்துக்கொண்டாள். மாடுகளைக் கம்பத்தில் கட்டிவைத்து விட்டு, கையைக் கழுவிக்கொண்டு, மளமளவென வீட்டிற்குள் நுழைந்தாள். ஒரு போசியில் (சிறு வெண்கலப் பாத்திரம்) மோரைக்கொண்டுவந்து, "இந்தாங்கோ சாமி! வெய்யில் நேரம் மயங்கிப் போயிருக்கிறீங்களே, மோரை சாப்பிடுங்கோ," என்று முக மலர்ச்சியுடன் கூறிக் கையை நீட்டினள்.

காமாட்சியோ சற்று தயங்கினன்; முன்னர் பட்ட சூட்டை நினைத்துக் கொண்டுபோலும். "பரவாயில்லை" என்று மெதுவாகக் கூறிவிட்டுத் தலை குனிந்துகொண்டான்.

அவளோ "இல்லை சாமி, உங்களுக்கு பசிகிறகிறப்பு போலே இருக்கே! முதல்லே இதைக் கொஞ்சம் குடிங்கோ. ஒரு நிமிட்லே சோருக்குறேன்." என்று கூறிப் பாத்திரத்தை அவன் பக்கத்தில் வைத்துவிட்டு விரைந்து உள்ளே போனள்.

காமாட்சியும், பசியாலும், களைப்பாலும் தூண்டப்பட்டு, அந்த மோரை சொட்டு மிச்சம் விடாது குடித்துத் தீர்த்தான். வயிற்றுக்குள் குளிர்ச்சியேற்படவே, தூக்கமும் வலிய வந்தது. அப்படியே திண்ணைச் சுவற்றில் தலையைச் சாய்த்துப் படுத்தான். அதே சமயத்தில், வெளியில் எட்டிப்பார்த்த தங்கம்மாள், ஒரு ஓலைப் பாயையும் புதுத் தலையணையையும் கொண்டுவந்து கொடுத்து, "இது நேத்துத்தான் சந்தையிலே வாங்கினேனுங்கோ, நாங்க வெச்சி தீட்டாக்கலீங்கோ." என்று கபடமற்ற முறையில் கூறி மெல்ல சிரித்தாள்.

தூக்கக்கலக்கத்திலே அவனும் ஒரு அசட்டுச்சிரிப்பு சிரித்துவிட்டுப் பாயை விரித்துப் படுத்தான். அவன் தூங்கியது அரைமணி நேரம்தானிருக்கும். அடுப்புக் பக்கத்திலே தங்கம்மாளின் கைகள் பரபரப்பாக வேலைசெய்தன. வெளியில் வந்தாள். செம்பில் தண்ணீர் ஏந்தியபடி, 'சாமி! எந்திரியுங்கோ" என்று பலமுறை குரல் கொடுத்துப் பார்த்தாள். அவன் தூக்கம் கலையவில்லை. பசி மயக்கத்தால் உணர்வற்று கிடப்பதாக அவளுடைய மென் மனதில் பட்டதுபோலும்? நகரவாச நங்கையர்களைப்போல், இவள் பிறரை துணைக்குக் கூவி அழைக்கவில்லை. அவன் கிடந்தால் கிடக்கட்டுமென்று விட்டுவிடவுமில்லை. சடக்கென, வலது கையில் இருந்த செம்பை இடது கையில் மாற்றிக்கொண்டு, வலது கையால் அவனது தோளைத்தொட்டு அசைத்தாள். அவன் எழுந்தபாடில்லை. பசி மயக்கம்தான் என அவள் மனதில் பட்டது போலும். செம்பை திண்ணைமீது வைத்தாள். சடக்கென திண்ணைமீதேறிஉட்கார்ந்து காமாட்சியை;சிறுகுழந்தையைத் தூக்கி உட்காரவைப்பதுபோல் தூக்கி உட்கார வைத்து, தன் தோள்மீது சாய்த்துக் கொண்டு, வலதுகையில் தண்ணீரை அள்ளி அவன் முகத்தில் தெளித்தாள், அவள் தூக்கியதால் அரைகுறையாகத் தெளிந்த தூக்கம், தண்ணீர் தெளித்ததும் நிற்கவாபோகிறது? அவன் திடுக்குற்று தெளிவுற்று கண் திறந்து பார்த்தான், தன்னைத் தங்கம்மாள், அணைத்துப் பிடித்துக்கொண்டிருப்பதைக் கண்டான். முதலில் திடுக்குற்று அகல முயன்றான். தங்கம்மாளோ, பிடித்த பிடியை விடாது, "விழுந்து விடாதிங்கோ சாமி! விழுந்து விடாதிங்கோ. கொஞ்சநேரம் அப்படியே உட்காருங்கோ. மயக்கம் தெளியட்டு" மென்று தாயன்பில் கூறினள்.

அவன் அந்தக்கட்டளையைமீறவோ, அந்தப்பிடியிலிருந்து விலகவோ, முடியாதபடி ஏதொஒரு புதியவிசித்திரசக்தி - உணர்ச்சி - செய்துவிட்டது. ஒருவித இன்பமின்சார சக்தி, அவன் உடல் முழுவதும் பாய்ந்து அவளை ஒரு புது மனிதனுக்குவதுபோல் அவனுக்குப் புலனாயிற்று. மெள்ள அவளுடைய முகத்தைப் பார்த்தான். சிறுகுழந்தைப் பிராயத்திலே, தன் தாயின் முகத்தில் கண்டதுபோன்ற அன்பும், ஆர்வமும், கவலையும், அக்கரையும் அவள் முகத்தில், பொலிவதைக் கண்டான். அவன் தலை நிமிர்ந்து பார்த்ததும், அவள் முகத்தில் கவலைக்குறி மறைந்து, மகிழ்ச்சிக்குறி பொலிவுறத் தென்பட்டது. அடுத்த விநாடி அவள் முகத்தில், வெட்கத்தின் குறி படர்ந்தது. சடக்கென தன் முகத்தைத் திருப்பிக் கொண்டாள், ஆனல் பிடித்த பிடியை மட்டும் ஏனே அவள் கை தளர்த்தவில்லை. இந்த "வெட்க நாடகம்" ஒரு நிமிஷம்தான். பொறுப்புணர்ச்சி மீண்டும் உதித்தது. வெட்கத்தை மறந்து, பழையபடி மருத்துவத்தாதி நிலைமையுற்றுள். (தொடரும்.)

# கற்பனையும் காலப்போக்கும்

### மேக்-அப் ஏறலையே

**டைரக்டர்:**—கதா நாயகியை கன்றாவியாப் பண்ணி வச்சிருக்கையே! நன்னயிருக்கு!

**மேக்-அப்-மேன்:**—என்ன செய்யறது போங்கோ. இப்படிப்பண்ண எனக்கென்ன ஆசையா. நானும் என்னலே ஆனவரைக்கும் பார்த்தேன். மேக்-அப் கொஞ்சங்கூட ஏறலையே. நானென்ன செய்யட்டும். மேக் - அப் ஏறினத்தானுங்களே தெம்பு, மேலுக்குமேல் உற்சாகம். அது இல்லீங்களே. மேக் - அப் மாத்திரம் கொஞ்சம் ஏறவாரம் பிச்சுட்டா அப்புறமாப் பாருங்கோ.

• • • • •

### உண்மைக்கு இடம்

**குற்றஞ் சாட்டப்பட்டவர்:**—உண்மைக்கு எங்கேயும் இடமுண்டு: இதைத் தாங்கள் ரூபித்து விட்டீர்கள்.

**போலீஸ் உத்த்யோகஸ்தர்;**—உங்களுக்கு இன்னும் உலகம் தெரியவில்லை. உண்மைக்கு இடம் உண்மையிடந்தான்.

• • • • •

### பழக்கமில்லிங்களே

**வக்கீல்தார்:**—உன் பெண்டாட்டி பேரைச் சொல்லும்.

**கக்ஷிக்காரர்:**—ஐயையோ இதென்னவிபரீதம்? பெண்டாட்டி பேரை யார் சொல்றது? நங்க சொல்ற பழக்கமில்லிங்களே. சரிங்கோ நம்ம மதுரையிலே என்னமோ அம்மன் கோயில் இருக்குதுங்களே அந்த சாமி பேருதானுங்கோ நம்ம வீட்டுக்காரி பேரு.

• • • • •

### அவசரம்

**உட்கார்ந்திருப்பவர்:**—தெய்வாதீனமா இன்றைக்கு ரைலிலே, இடம் நிறைய இருக்கு. இதோ இங்கே உட்காருங்களே. எதுக்காக நீங்கள் நின்று வரவேண்டும்?

**நின்று வருபவர்:**—இல்லே, இல்லே, கொஞ்ச அவசரக் காரியமா போறேன்.

(உடுமலைப் பீரங்கி முதல் புத்தகம்.)

# அன்று சொன்னார். ஆனல் இன்றே?

——: (x) :——

கீழே தரப்படுபவை, சத்யாக்கிரகப் போர் தீவிரமாக நடந்த 1938ம் ஆண்டுக்கு முன்னர் பண்டித நேரு செய்த சொற்பொழிவுகளில் காண்பவை :—

பதவி வேட்டையும் சுயநலமும்தான் வகுப்புவாதம்.

• • • • •

வறுமையையும் பசிப்பிணியையும் நாட்டைவிட்டு ஓட்டுவோம்.

• • • • •

பாரதநாட்டின் வறுமையைப் போக்க நாம் முதலில் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும்.

• • • • •

அபேதவாதம் என்றல் தனவந்தர்களின் பணத்தைக் கொள்ளையிடுவதென்பதல்ல. அது ஒரு பொருளாதார ஏற்பாடேயாகும்.

• • • • •

காங்கிரஸ் பதவி ஏற்றுக்கொண்டதால் ஒரு மாறுதலும் ஏற்படவில்லை. ஆனல் ஜனங்களுக்கு அதிகாரிகளைக் கண்டால் முன்னிருந்த பயம் போய்விட்டது.

• • • • •

வறுமைப்பிணி இன்றும் இருந்து கொண்டுதானிருக்கிறது. உண்மையான அதிகாரங்கள் வரும் வரையிலும் நமது கஷ்டங்கள் தீராது.

• • • • •

காங்கிரசின் பலம்தான் தேசத்தினுடைய பலம். காங்கிரஸ் பலவீனமடைந்தால் தேசம் பலவீனமடைகிறதென்று அர்த்தம்.

• • • • •

# இந்தி எப்போது பிறந்தது?

——: (x) :——

இந்திமொழி பதிமூன்றும் நூற்றண்டு தொடக்கத்தில்தான் தோன்றிற்று இந்தி மொழியின் ஆதிகவி சண்டபார்ட்டி என்பவர் "பிரித்திவீராஜ் ராஸ்யூ" என்ற நூலை எழுதினர்.

டெலிபோன் : 86729.

## நியூடன் அண்டு கம்பெனி,

80, வாலாஜா ரோடு, மௌன்ட் ரோடு,

சென்னை 2,

கண்ணுக்கினிய எங்கிரேவிங்குகளும், சகல வித ஆப்டோன் பிளாக்குகளும், லைன் பிளாக்குகளும், ட்ரைகலர் பிளாக்குகளும், ரப்பர் ஸ்டாம்புகளும் செய்வதற்கான சிறந்த இடம். நம்பிக்கையும், புகழும் வாய்ந்த தக்க இடம்.

வெளியூர் ஆர்டர்களுக்கு ப்ரத்தியேக கவனிப்பு.

Edited and Published by B. Ranganadha Naidu, 33, Thiruvengada Mudali Street, Periamet, Madras. 3. Printed by J. A. SILVIA at the "LIBERATOR" Press 2-11, Mount Road, Madras 2.
Jt: Editor; PIVI.AR.